# மரியாவின் மாதம்

## 2020



# அன்னை மரியாவின் வணக்க மாதம்

## முன்னுரை:

அன்னை மரியாவின் வணக்க மாதம் 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. ஆனால் அது 17ஆம் நூற்றாண்டில்தான் இயேசு சபையால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டது.1859 ஆம் ஆண்டு திருத்தந்தை 9ஆம் பியுஸ் இப் பக்தி முயற்சியில் ஈடுபடுவோருக்கு பரிபூரண பலனை வழங்கினார்.

1965 ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் அமைதிக்காக செபிக்க மரியாவின் மாதத்தை பயன்படுத்த அறிவுறுத்தி சிறிய சுற்றுமடலை வெளியிட்டார். 2002 ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் ஜான் பால் மே மாதத்தை ''மரியாவின் மாதமாக'' பல்வேறு பக்தியான வழிபாடுகளோடும்,மறைகல்வியோடும் கொண்டாட அழைப்பு விடுத்தார்.

## 2020 மே மாதத்திற்கான கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மடல்

அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள மே மாதத்தில், இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகைக் கண்டுணருமாறு அனைத்து கத்தோலிக்கருக்கும் அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மே மாதம் அண்மித்து வருவதை முன்னிட்டு, உலகின் அனைத்து விசுவாசிகளுக்குமென, ஏப்ரல் 25, இச்சனிக்கிழமையன்று மடல் ஒன்றை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொரோனா தொற்றுக் கிருமி பரவல் விதிமுறைகளால், வீடுகளிலேயே தங்கியிருக்கும் நாம், கிடைக்கின்ற வாய்ப்பை அதிகம் பயன்படுத்தி, வருகின்ற மே மாதத்தில் இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகை மீண்டும் கண்டுணர்வோம் என்று கூறியுள்ளார்.

மே மாதத்தில் இறைமக்கள் அனைவரும், அன்னை மரியா மீது தங்களுக்குள்ள ஆழ்ந்த அன்பையும் பக்தியையும், சிறப்பாக வெளிப்படுத்தும் விதமாக செபமாலை செபித்து வருகின்றனர் என்று கூறியுள்ள திருத்தந்தை, இந்த கொள்ளை நோய் காலத்தில், சூழ்நிலைக்கேற்ப, தனியாக அல்லது சேர்ந்து செபமாலை செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

செபமாலை செபிப்பதற்கு வலைத்தளத்திலும் கூட நல்ல வழிமுறைகள் உள்ளன என்று கூறியுள்ள திருத்தந்தை, செபமாலையின் முடிவில் அன்னை மரியாவை நோக்கிச் செபிப்பதற்கு உதவியாக இரு செபங்களையும் விசுவாசிகளுக்கென வழங்கியுள்ளேன் என்றும், நானும் வருகிற மே மாதத்தில் உங்களோடு ஆன்மீக முறையில் இணைந்து இச்செபங்களை செபிப்பேன் என்றும் கூறியுள்ளார்.

நம் அன்னையாம் மரியாவின் இதயத்தோடு இணைந்து கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிக்கும் போது, அது, ஒரே ஆன்மீகக் குடும்பமாக, இன்னும் அதிகமாக நம்மை ஒன்றிணைக்கும் மற்றும், இப்போது நாம் எதிர்கொள்ளும் சோதனையை வெல்வதற்கு உதவும் என்றும், திருத்தந்தை தன் மடலில் குறிப்பிட்டுள்ளார்.

நானும் உங்களுக்காக, குறிப்பாக, மிகவும் துன்புறும் மக்களுக்காக சிறப்பாகச் செபிக்கின்றேன், எனக்காகவும் செபியுங்கள், உங்கள் எல்லாருக்கும் நன்றியும், ஆசீரும் என்று, இம்மடலை நிறைவு செய்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மே மாதத்தில் மரியாவின் வணக்கமாதா வழிபாடுகளில் பங்கேற்போருக்கும், பங்கேற்க இயலாதோர் குடும்பமாக கூடி வந்து,மரியாவைப் பற்றி சிந்தித்து செபமாலை செபிக்க உதவும் வண்ணம் மாதம் முழுவதும் பயன்பட சிந்தனைகள், செபங்கள், பாடல்கள் தொகுத்து தரப்பட்டுள்ளன. பயன்படுத்தி, செபியுங்கள், செயல்படுங்கள்.

**மரியே வாழ்க!**

**பாடல்:**

தேவதாயின் மாதம் இது அல்லவோ - இதை

சிறப்பாய் கொண்டாடிடவே புறப்பட்டு வாரீர் தோழா

1.தோட்டங்களில் உள்ள பல வாட்டமில்லா புஷ்பங்களை

சோடுசோடாய் சேர்த்து நல்ல மாலை கட்டுவோம்

கூட்டமாக எல்லாம் சேர்ந்து வீட்டிலுள்ள பேரை சேர்த்து

கோவிலுக்கு சாயரட்சை ஆவலுடன் போவோம் வாரீர்

2.ஒவ்வொரு வீட்டார்களெல்லாம் ஒவ்வொரு நாள் சிறப்பிக்க

ஒப்பந்தமே செய்தாலொரு தப்புமில்லையே

இவ்விதமே செய்தால் பலன் எவ்வளவோ கூடிவரும்

இந்தமாதம் எல்லாருக்கும் நல்லதிர்ஷ்ட முள்ளதாகும்

3.பூவிலுள்ள மானிடர்க்கு தேவசுதன் தந்த அன்னை

புண்ணியவரங்கள் எல்லாம் கொண்ட அன்னையே—2

ஆவலுடன் நாம் எல்லோரும் தேவமரி பாதம் கூடி

ஆனந்த மிகுந்த பலகீதங்களைப் பாடுவோமே

மே1

# அன்னை மரியாவின் வணக்க மாதம் எதற்காக?



## 1. மரியா இறைவனின் தாய்

இறைவன் மனிதராக மரியாவின் சம்மதம் தேவைப்பட்டது. இறைவன் நமக்காக மனுவுரு எடுக்க அன்னைமரியா ஒரு கருவியாக செயல்பட்டார்.

## 2. மரியா இயேசுவின் சீடர்

அன்னை மரியா மீட்பின் செய்தியை முதன்முதலாக கேட்டவர் .தொடக்கமுதலே இயேசுவை பின்தொடர்ந்தவர்.தன வாழ்வு முழுவதையும் இயேசுவின் பணிக்கு அர்ப்பணித்தவர்.

## 3. மரியா நம் தாய்

கிறிஸ்துவை தலையாகக் கொண்ட திரு அவை எனும் மறையுடலின் உறுப்பினர்கள் நாம் என்பதால் ,அருள்நிலையில் நம் அனைவருக்கும் தாயாகின்றார்.

## 4. மரியா நம்மை அன்பு செய்கிறார்

தன மகனின் பாடுகளும் மரணமும் நமது மீட்புக்கு தேவை என்பதால் ,கலங்காமல் ஏற்று, தன மகன் உடனிருந்து துன்புற்றார்.

## 5. மரியா நம் பரிந்துரையாளர், உதவியாளர்

மரியாவின் உதரத்தில் இயேசு கருவான நாள் முதல் இந்நேரம் வரையிலும் நம் சார்பாக இருந்து நம் தேவைகளில் பரிந்து பேசுகிறார்.

மே 2

# அவர் பெயர் மரியா



"கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா"- **லூக்கா 1: 26-27.**

**சிந்தனை:**

† அன்னை மரியாவுக்கு பல சிறப்பு பெயர்கள், அவர் புகழ் சொல்லும் பாடல்கள், பக்தி முயற்சிகள்

அவர் பெயரில் குருசடிகள், ஆலயங்கள் ,திருத்தலங்கள்

அவர் புகழ் பரப்ப சபைகள், அமைப்புகள், இயக்கங்கள்

**† மரியாவின் வணக்கத்தை குறித்து திரு அவையின் படிப்பினைகள்:**

1. திருவிவிலியம் மற்றும் மரபு அடிப்படையில் மரியா மீது பக்தி அமைய வேண்டும்.
2. மரியா பற்றிய சிந்தனையிலும், பக்தி முயற்சிகளிலும் கிறிஸ்துவே மையமாக இருக்க வேண்டும். மரியா இயேசுவின் முதல் சீடர்.
3. மரியா நம்பிக்கை கொண்டோரின் சமூகமாகிய திரு அவையின் தலை சிறந்த மாதிரி.

**மரியாவின் மேல் நான் கொண்டுள்ள பக்தியை எவ்வாறு வெளிப்படுத்துகிறேன்?**

1. -----------------------------------------------------------------------------------------------
2. ------------------------------------------------------------------------------------------------
3. -----------------------------------------------------------------------------------------------

**பாடல்:**

இனிய உன் நாமம் ஓதிடல் தினமே

அனைவரும் மகிழ்வோமே

தாயினும் மேலாம் தாயுமே நீயே தமியோர் திரவியமே – 2

அன்பிதே அன்பிதே மாதா தன்னலமேயற்ற மாதா – 2

கலைமொழியால் உனைத் துதித்திடல் நாளும்

கவலையே தீருமம்மா – 2

தேனிசைப் பாவால் தாயுனைப் பாட

தெவிட்டா உணவாமே – 2

மே 3

# இறைவனின் ஏழை மரியா



“அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்” - **லூக்கா 1:48**

**சிந்தனை :**

† இன்று அன்னை மரியா படங்களிலும் ,திருவுருவங்களிலும் அலங்காரத் தோற்றத்தில் காட்சிபடுத்தப்பட்டுள்ளார் .ஆனால் அவர் ஓர் ஏழைப் பெண். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர், தாழ்நிலையினர்” (லூக்கா 1:48).

† குழந்தை இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தபோது ,ஏழைகளின் காணிக்கையான இரு புறாக்களை கொடுத்தது (லூக்கா 2:24)அவர் ஏழை என்பதற்கு சான்று.

†மரியா“இறைவனின் ஏழை” (அனாவிம்)

**இறைவனின் ஏழைகளின் 4 பண்புகள்:**

1. செல்வம் இல்லாதவர்கள்
2. செல்வாக்கு இல்லாதவர்கள்
3. ஒடுக்கப்பட்டவர்கள்
4. இறைவனை நம்பியவர்கள்

**ஏழைகளின், ஒடுக்கப்பட்டோர் சார்பாக இறைவன் செயலாற்றுகிறார். எந்தெந்த வழிகளில் நான் ஏழைகள் மீது அக்கறை காட்டுகிறேன் ?**

1. ------------------------------------------------------------------------------------------------------------------
2. ------------------------------------------------------------------------------------------------------------------
3. -----------------------------------------------------------------------------------------------------------------

**பாடல் :**

அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்மரி

என்றும் உந்தன் புகழைப் பாடுவோம்

தேடும் மாந்தரைக் தேற்றிக் காத்திடும்

உந்தன் அருள் வரங்கள் இன்று தேடினோம் - 2

எண்ணிறந்த உதவிகளைப் பெற்று தந்த நீ

எங்கள் வாழ்வில் உடனிருந்து காத்து வருகின்றாய் - 2

நன்றி பூக்கள் ஒன்று சேர்த்தோம் உந்தன் பாதத்தில்

சகாயத் தாய்மரியே எம்மை

அரவணைத்துக் காப்பாய் நீயே - 2

மே 4

## யோசேப்புக்கு மண ஒப்பந்தமான மரியா



“அவர் (மரியா) தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர்”– **லூக்கா 1:27**

“மரியாவின் கணவர் யோசேப்பு”– **மத்தேயு 1:16**

**சிந்தனை:**

† கணவன் - மனைவியின் மனம் ஒத்த மண வாழ்வு மகிழ்ச்சியானது.

† **மணவாழ்வின் சீர்குலைவுகளுக்கு சில காரணங்கள்:** நுகர்வுவெறி, பணமோகம் ,பயன்படுத்தி தூக்கியெறியும் கலாச்சாரம், சுயநலம், ஆதிக்கப் போக்கு, வியாபார ஊடகங்கள், ஒழுக்கச் சீர்கேடு, மது போதைப் பழக்கங்கள்.

**† மரியா யோசேப்பின் மணவாழ்வு :**

1.மரியாவும் யோசேப்பும் யூத மரபுப்படி திருமண ஒப்பந்தம் செய்தவர்கள்.

2.ஒருவருக்கொருவர் காட்டிய அன்பு, இறைவன்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தியது.

3.மண ஒப்பந்தமான மரியா கருவுற்றிருப்பதை அறிந்த யோசேப்பு அச்சிக்கலைக் கையாளுவதில் காட்டிய பெருந்தன்மை

4.அனைத்திலும் யோசேப்பை முதன்மைப்படுத்தியது (லூக்கா 2:48)

5.அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு செயல் பட்டது – எலிசபெத்துக்கு உதவி, கானாவூர் திருமணத்தின் குறையை நீக்கியது.

**இன்றைய மணவாழ்வு சிறக்க கணவனிடம், மனைவியிடம் அவசியம் இருக்க வேண்டியவை:**

1. ------------------------------------------------------------------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------------------------------------------------------------

**பாடல்:**

அன்னை மரியாம் மாதாவுக்கு

மங்களம் பாடிடுவோம்

நாமிந்த வேளையில் ஒன்றாய்க் கூடி

வாழ்த்திப் போற்றிடுவோம்

அருள் நிறைந்த அம்மணி அகில லோக நாயகி – 2

ஆண்டவனின் அன்புத் தாயும் நீ (எங்கள் அன்னையே) – 2

ஆண்டவனின் அன்புத் தாயும் நீ காத்திடும் எங்கள்



## மே 5 அருள்மிகப் பெற்ற அன்னை

“வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, ”அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார்......” - **லூக்கா 1:28**

**சிந்தனை:**

† இறைவனது அருளின் உயிரோவியம் அன்னை மரியா. வானதூதரின் வாழ்த்தே அவரது பெயர்: “நாமே அமல உற்பவம் “. புனித அகுஸ்தீன் கூறுவார்: “மரியா இயேசுவின் தாயாகுமாறு ,இறைவனின் அருளால் பாவக் கறையிலிருந்து பாதுகாக்கப்பட்டார”.

† 1854 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாளில் திருத்தந்தை 11 ஆம் பியுஸ் மரியாவின் அமல உற்பவம் எனும் விசுவாசக் கோட்பாட்டை அறிவித்தார்: “மரியா, தாம் கருவான முதல் நொடியிலிருந்தே வல்லமை மிக்க இறைவனின் தனிப்பட்ட அருளினாலும், இயேசு கிறிஸ்துவின் பேறு பலன்களினாலும் தொடக்கப் பாவக்கறை (சென்ம பாவம்) எதுவுமின்றி பாதுகாக்கப்பட்டார்”.

†“ ஆண்டவர் உங்களோடு இருப்பாராக” என்பது வாழ்த்துரை மட்டுமல்ல, அது இறைவனின் வாக்குறுதி. இறைவனின் உடனிருப்பு நமக்கு வல்லமை தருகிறது.

**நாம் எந்த வழிகளில் இறை அருளைப் பெறலாம்?**

1. விவிலியம் --------------------------------------------------------------------
2. திருவழிபாடு -----------------------------------------------------------------
3. பக்தி முயற்சிகள் ----------------------------------------------------------
4. வாழ்வின் நிகழ்வுகள் ----------------------------------------------------

**பாடல்:**

அன்னைக்கு கரம் குவிப்போம்

அவள் அன்பை பாடிடுவோம் - 2

கன்னிமையில் இறைவன் உருக்கொடுத்தார் - அந்த

முன்னவனின் அன்னையெனத் திகழ்ந்தாள் - 2

மனுக்குலம் வாழ்ந்திட பாதை படைத்தாள் - 2

தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்.



## மே 6

## கலக்கம் நீங்கப் பெற்ற கன்னி மரியா

“இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, ”மரியா, அஞ்சவேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர் என்றார்”- **லூக்கா 1: 29-30.**

**சிந்தனை :**

† **கவலை, கலக்கம் இவற்றிற்கான காரணங்கள்:** புதிய சூழ்நிலைகள், புதிய பொறுப்புகள்,புதிய இடர்கள், பெருந் தோல்விகள் மற்றும் பிற.

**†மரியாவின் கவலைகளும் கலக்கங்களும்:**

1. திருமணம் ஆகாத கன்னி நிலையில் கடவுளின் மகனுக்கு தாயாக அழைப்பு.
2. யோசேப்பு மரியாவை விலக்க முடிவு செய்தது.
3. குழந்தையைக் காப்பாற்ற எகிப்துக்கு ஓடிப்போனது .
4. காணமல் போன மகனை மூன்று நாட்களாக தேடியது.
5. தன மகன் சிலுவையில் அறையப்பட்டதைக் கண்டது.

**† எவ்வாறு மரியா கலக்கங்களை எதிர்கொண்டார்?**

இறைநம்பிக்கை : “அஞ்ச வேண்டாம் ,கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்”. வாசிக்கவும் : (1 பேதுரு 5:7)

கடல் நடுவிலும் பாதைகள் பிறக்கும் (விப 14) பாழ்வெளியிலும் உணவு கிடைக்கும் (விப 16) பாறையிலிருந்தும் நீரூற்றுகள் தோன்றும் (விப 17)

**எனது கவலைகள் :**

1. ------------------------------------------------- 2.---------------------------------------------------

3 ------------------------------------------------- 4---------------------------------------------------

**பாடல்:**

அழகின் முழுமையே தாயே

அலகையின் தலைமிதித்தாயே

உலகினில் ஒளி ஏற்றிடவே


அமலனை எமக்களித்தாயே – 2

இருளே சூழ்ந்திடும் போதே உதயத் தாரகை போலே – 2

அருளே நிறைந்த மாமரியே அருள்வழி காட்டிடுவாயே

மே 7

# கடவுளையே கேள்வி கேட்ட கன்னி மரியா



“மரியா வானதூதரிடம், ”இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார்.”– **லூக்கா1:34**

**சிந்தனை:**

† மரியா ஒரு கன்னி (லூக்கா 1:26, 27 மத்தேயு 1:18-23)

† “இயேசு பிறப்பதற்கு முன்பும் ,அவரை உதரத்தில் கருத்தாங்கிய போதும் அவரைப் பெற்றெடுத்த பின்பும் மரியாவின் கன்னிமையில் எந்த பழுதும் ஏற்படவில்லை.” என்பது திருஅவையின் கூற்று.

† கி பி 533 இல் கூடிய இரண்டாம் கான்ஸ்தாந்தி நோபுள் பொதுச் சங்கம் “மரியா இறைவனின் தாய் எப்பொழுதும் கன்னி” எனும் விசுவாச அறிக்கையை வெளியிட்டது.

† கன்னிமை என்பதற்கு பிளவுபடாத அன்பு முழுமையான தன்னர்ப்பணம் எனும் அர்த்தங்கள் உண்டு.

1. இயேசுவுக்கு, யோசேப்புக்கு, பிறருக்கு மரியா காட்டிய அன்பு.
2. இறைபணிக்கு தன்னையும், இறையாட்சிப் பணிக்கு தன் மகனையும் தியாகம் செய்தது மரியாவின் அர்ப்பணம்.

**அர்ப்பணக் கன்னிமை:**

1. அருள்பணியாளர்களுக்கு - மணத்துறவு
2. துறவியருக்கு - கன்னிமை உறுதியேற்பு
3. தம்பதியருக்கு - திருமணக் கன்னிமை

**பாடல் :**

அழகோவியமே எங்கள் அன்னை மரியே
உயிரோவியமே எங்கள் உள்ளங் கவர்ந்தவளே
உன் பார்வை சொல்லும் கருணையும்
பாத மலரின் அருமையும் - 2
அழகே அழகே எங்கள் அம்மா நீ அழகே

1)கோடான கோடி மக்கள் குறைகளைத் தீர்ப்பவளே
கொள்ளை அழகோடு எங்கள் ஆலயம் அமர்ந்தவளே
அம்மா நீ தேரினிலே பவனி வரும் போதினிலே
ஒய்யாரமாக மனம் ஊர்வலமும் போகிறதே
யாரும் இல்லா ஏழை எங்கள் தஞ்சம் நீயே தாயே
உம்மை நம்பி வந்தோம் இங்குஉள்ளதெல்லாம் தந்தோம்
உந்தன் முகத்தைப் பார்க்கும்போது உள்ளம் மகிழுதே
உந்தன் நாமத்தைச் சொல்லும்போது நெஞ்சம் இனிக்குதே….

**மே 8**

## மரியா ஆண்டவரின் அடிமை



" பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார் " **(லூக்கா 1:38)**

**சிந்தனை :**

† ஒருவர் ஆணவம் கொள்ள பல காரணங்கள் உண்டு :பணம், படிப்பு, பதவி சாதி, மொழி, சமயம் போன்றவை.

† ஆணவத்தால் அழிவு – இன வெறி , சாதி மோதல் ,சமய தீவிரவாதம் , கலவரங்கள் , கொடுமைகள் ,கொலைகள் .

**† ஆணவத்தின் தீய விளைவுகள் பற்றி விவிலியம் :**

1. வானதூதர்கள் அழகிகளாக வீழ்ந்தனர்
2. முதல் பெற்றோர் அருள் நிலையிலிருந்து வீழ்ச்சியுற்றனர்
3. ஆணவத்தால் வீழ்ச்சி (மத்தேயு 23:12)

**† ஆணவத்திற்கான மாற்று மனநிலை தாழ்ச்சி**

1. அன்னை மரியா (லூக்கா 1:38 , 48-49)
2. இயேசு (பிலிப்பியர் 2:6-11)

† தாழ்ச்சி என்பது தாழ்வு மனநிலையோ, அடிமை உணர்வோ அல்ல. நாம் கடவுளின் பிள்ளைகள் என்றும் ,நம்மிடம் உள்ளவை அவருடைய கொடிகள் என்றும் ஏற்றுக்கொள்வது.

**தெரிந்து கொள்:** தலையான பாவங்கள் ஏழு: ஆணவம், பேராசை, பொறாமை, கோபம், மோகம், போசனப்பிரியம், சோம்பல்

**பாடல்:**

அமலோற்பவியே அருள்நிறைத் தாயே வாழ்க வாழ்க

மாசறு கன்னியே மாபரன் தாயே வாழ்க வாழ்க – 2

வாழ்க தாயே வாழ்க நீயே வாழ்க வாழியவே

அன்னையே வாழ்க அமலியே வாழ்க

வாழ்க வாழியவே

மாமரியே மாதவளே வாழ்க வாழ்க

மாந்தர்களை காப்பவளே வாழ்க வாழ்க – 2

மனமகிழ்ந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க

தினம் நினைந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க

## மே 9 தூய ஆவியின் ஓவியம் அன்னை மரியா




“அவர்கள் (யோசேப்பும் மரியாவும் ) கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார்....... ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி,” யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்” - **மத்தேயு 1:18, 20**

**சிந்தனை :**

† மரியாவுக்கும் தூய ஆவிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது (லூக்கா 1:35).இறைவன் மரியா மீது தனிப்பட்ட அன்பு கொண்டிருந்தார் மரியாவும் இறைவனை முழுமையாக அன்பு செய்து ,அவரது மீட்புத் திட்டத்திற்கு ஒத்துழைத்தார் .

† தூய ஆவியின் வல்லமையால் மரியா இயேசுவை ஈன்றெடுத்தார் என்பது விசுவாசக் கோட்பாடு.

†“ கடவுளின் தூய ஆவியார்க்கு துயரம் வருவிக்காதீர்கள் (எபே 4:30)

“தூய ஆவியின் செயல்பாட்டைத் தடுக்க வேண்டாம் “(1 தெச 5:19)

† பழகிவிட்ட பாணிகளையும்,மரத்துப்போன மரபுகளையும் கைவிட்டு “விரும்பிய திசையில் வீசும்”(யோவான் 3: 8) தூய ஆவியின் வழிநடத்துதலை பின்பற்ற வேண்டும்.

**தெரியுமா ?**

உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் வாயிலாக தூய ஆவி நம்மீது பொழியும் 7 அருட்கொடைகள்: 1.--------------------------2.--------------------------3.--------------------4.-------------------------------------5.------------------------6.----------------------7.----------------------

**பாடல்:**

அம்மா மரியே வாழ்க– 2

மரியே வாழ்க மரியே வாழ்க மாதா நீ வாழ்க

எங்கள் மரியே வாழ்க மரியே வாழ்க மாதா நீ வாழ்க

அறியாத மாந்தருக்கு அறியவைத்தாய் - உனை

ஆரோக்கியத் தாயாக உணர வைத்தாய் - 2

மறையாத வான் நிலவாய் மாறாத வான் மழையாய் - 2

திகழ்கின்ற திருமரியே நீ வாழ்க - 3

# மே 10

## இறைவன் குடியிருந்த கோவில்



"அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்"- **மத்தேயு 1:21**

**சிந்தனை:**

† கோவில் என்றால் இறைவனின் வீடு அல்லது உறைவிடம்

1. உலகமே கடவுளின் கோவில் (எசா 8:3)

2. திருஅவை இறைவன் குடியிருக்கும் கோவில் (1 கொரி 3:16-17)

3. மரியாவின் உடல் கடவுள் குடியிருந்த கோவில் – வார்த்தையான இறைவன் மரியாவில் குடிகொண்டார் .

4. மரியா தம் விசுவாசத்தாலும் ,அன்பாலும் தம் உள்ளத்தில் இறைவனுக்கு கோவில் செய்தார். இறைவார்த்தையைக் கேட்டு, உள்ளத்தில் பதித்து, சிந்தித்து செபித்தார்.

**† நாம் எவ்வாறு இறைவனின் கோவில்களாக மாறுவது ?**

1. இறைவார்த்தையை ஒவ்வொருநாளும் தியானிப்பது

2. திருமுழுக்கு வாக்குறுதிகளின்படி வாழ்வது

3. உறுதிப்பூசுதலில் பெற்ற தூய ஆவியை நம்மில் செயல்பட அனுமதிப்பது.

4. நற்கருணையை தகுந்த தயாரிப்புடன் பெறுவது

5. நம் சொல்லும் செயலும் இறையன்பின் அனுபவமாக மாறுவது.

**நான் எந்த வழிகளில் ஆலய வழிபாடுகளில் பங்கேற்கிறேன்?**

1. பீடப் பணியாளராக 2 .அன்பியப் பொறுப்பாளராக 3. மறைக்கல்வி உதவியாளராக 4.-------------------------------------------- 5. --------------------------------------------

**பாடல்:**

அம்மா உந்தன் அன்பினிலே

அருள்வாய் எமக்கு அடைக்கலமே – 2

இறைவன் படைத்த எழிலே

இயேசுவைத் தந்த முகிலே – 2

தூய்மை பொழியும் நிலவே

துணையே வாழ்வில் நீயே



## மே 11

## மரியன்னையின் மனித நேயம்

“அதன்பின் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார் “– **லூக்கா 1:39-40**

**சிந்தனை:**

† **நாம் தற்பெருமை கொள்ள பல காரணங்கள் இருக்கலாம்:** பணம், பட்டம், பதவி, திறமை.

† ஆனால் மரியா அருள் மிகப் பெற்றவராக சிறப்பு பெற்றதும், இறைவனின் தாய் எனும் உன்னத நிலைக்கு தேர்ந்து கொள்ளப்பட்டதும் தன்னை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல என்பதை உணர்ந்தார் மனித நேயத்தோடு தொண்டு புரிந்தார்.

**† மரியா எதற்காக விரைந்து சென்றார் ?**

1. எலிசபெத்துக்கு மீட்பின் நற்செய்தியை அறிவிக்க
2. அவருக்கு உதவி செய்ய

**† மரியாவின் மனித நேயம் நமக்கு பாடம் :**

1. பிறரை வாழவைப்பதால் நாம் வாழ்கிறோம்
2. பிறரை உயர்த்துவதால் நாம் உயருகிறோம்
3. பிறருக்கு செய்யும் உதவி இறைவனுக்கு செய்யும் பணி(மத்தேயு 25:40)

**தெரிந்து கொள்வோம்:**

**உடல் சார்ந்த இரக்கச் செயல்கள்:**

1) பசியோடிருப்போருக்கு உணவளித்தல் 2) தாகமுற்றோரின் தாகம் தணித்தல், 3) ஆடையற்றோருக்கு ஆடை வழங்குதல், 4) அந்நியரை வரவேற்றல், 5) நோயுற்றோரை நலம் பெற செய்தல், 6) சிறையிலிருப்போரைச் சந்தித்தல் ,7) இறந்தோரை அடக்கம் செய்தல

**பாடல் :**

அம்மா உந்தன் அன்பினிலே

அருள்வாய் எமக்கு அடைக்கலமே – 2

இறைவன் படைத்த எழிலே

இயேசுவைத் தந்த முகிலே – 2

தூய்மை பொழியும் நிலவே

துணையே வாழ்வில் நீயே



## மே 12 மரியா நற்செய்திப் பணியின் விண்மீன்

“ உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று” – **(லூக்கா 1:44).**

**சிந்தனை :**

† நமது சமயம் நற்செய்தி அறிவிப்பு சமயம்

**இயேசுவே இறை தந்தையின் நற்செய்தி.**

உலகெங்கும் நற்செய்தியை அறிவிப்பது இயேசுவின் கட்டளை (மாற்கு 16:15)

† மரியா நற்செய்தி அறிவிப்பின் மாபெரும் மாதிரி – நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு மரியா ஒரு வழிகாட்டும் விண்மீன் “(திருத்தந்தை 6ஆம் பவுல்)

1. முதன் முதலாக நற்செய்தியை எலிசபெத்துக்கு எடுத்து சென்றார்
2. அன்புப் பணியாகவே நற்செய்தி அமைந்தது- 3 மாதம் தங்கி உதவி.
3. கானாவூர் குடும்பத்திற்கு நற்செய்தி – குறை நீங்கியது
4. மனம் தளர்ந்த சீடருக்கு உற்சாகம்

† இக்காலத்தில் நற்செய்தி அறிவிப்புக்கு எதிர்சாட்சிகள் : சாதி வெறி ,சமய மேலாதிக்கப் போக்கு ,நுகர்வு வெறி, கட்சி மனப்பான்மை, நீதியற்ற சமூக செயல்பாடுகள் போன்றவை.

**நான் எவ்வாறெல்லாம் நற்செய்தியை அறிவிக்க விரும்புகிறேன்?**

1. ------------------------------------------------------------------------------------------------------------------------
2. ------------------------------------------------------------------------------------------------------------------------
3. ------------------------------------------------------------------------------------------------------------------------

**பாடல்:**

ஆவே கீதம் பாடியே உம் புகழைப் பாடுவேன்

உன் அன்பின் பெருமை அகிலம் விளங்க

மாண்பைப் போற்றுவேன் - 2 ஆவே ..ஆவே…ஆவே…

பாவிகளின் ஆதரவே பாருலகோர் ஒளியே – 2

அன்பின் தாய் நீயே எம் குரல் கேளம்மா - 2

## மே 13

## பெண்களுக்குள் ஆசி பெற்றவர்



“அப்போது அவர் (எலிசபெத்து) உரத்த குரலில்,” பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!.......என்றார் ”- **லூக்கா 1:42**

**சிந்தனை:**

† இறைவனின் தாயாகப் போகும் மரியா உண்மையாகவே பெருமைக்கு உரியவர்.

† குடும்பத்தில், சமூகத்தில் பெண்களின் பணியும் பங்கேற்பும் முக்கியம். பெண்களை பெருமையடையச் செய்வது:

1. பிள்ளை வளர்ப்பு
2. குடும்ப பொறுப்பு
3. பண்பாட்டைக் காத்தல்
4. அன்பு, தியாகம்

**† மரியா ஆசி பெற்றதற்கு இரு காரணங்கள்:**

1. இயேசுவை கருத் தாங்கி ஈன்றெடுத்தார்
2. இறைவார்த்தையை ஏற்று கடைப்பிடித்தார்.

**† இயேசுவின் பணியில் பெண்கள்:**

1. பெண்களை தம் பணியில் உடன் உழைப்பாளர்களாக ஆக்கினார். (லூக்கா 8:1-3)
2. உயிர்ப்பின் முதற் சாட்சிகளாகும் பேறு
3. தொடக்கத் திரு அவையில் பணி (உரோ :16)

மரியாவை போற்றும் நாம் நம் குடும்பத்தில், சமூகத்தில், திருஅவையில் உள்ள பெண்களை மதிப்புடன் நடத்துகிறோமா?

**பாடல்:**

உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா
உலகாளும் தாயே அருள் தாருமம்மா -2

முடமான மகனை நடமாட வைத்தாய்
கடல்மீது தவித்த கப்பலைக் காத்தாய் - 2
பால்கொண்ட கலசம் பொங்கிடச் செய்தாய்
பொருள்கொண்ட சீமான் உன்பாதம் சேர்த்தாய் - 2

## மே 14

# இறைவனின் தாய்



“என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?” - **லூக்கா 1:43**

**சிந்தனை:**

† வரலாற்றில் ஐந்தாவது நூற்றாண்டு முதலே மரியாவை “இறைவனின் தாய்” என சொல்வதுண்டு. நாமும் மரியாவை நாம் தேவ தாய் என்றும் “இறைவனின் அன்னை “ என்றும் அழைத்து வருகிறோம்.

† கிபி 431 ஆம் ஆண்டு எபேசு பொதுச் சங்கம் “இயேசுவில் இறைத் தன்மையும் மனிதத் தன்மையும் முழுமையாக குடிகொண்டிருக்கின்றன. எனவே கன்னி மரியா இறைவனின் தாய் “ எனும் விசுவாச உண்மையை வெளியிட்டது.

† 1974 ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் சனவரி 1ஆம் நாளை “ மரியா இறைவனின் அன்னை” எனும் திருநாளை அறிவித்தார்.

† இறைவனின் அன்னை எனும் சிறப்பு பெயர் மரியாவுக்கு பொருந்தும் என்றாலும், மனிதத் தன்மையில் மரியிடம் பிறந்தவர் இறைமகன் இயேசு என்பதையே அது குறிப்பிடுகிறது. எனவே மரியாவை பெண் தெய்வமாக கருதக் கூடாது.

† மரியாவின் தாய்மை இறைவனின் தாய்மைக்கு அடையாளம் மற்றும் பங்கேற்பு.

இறைவனின் பிள்ளைகளாக எவ்வாறு வளருகிறோம்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பாடல்:**

என்ன அழகு உன் அருளழகு

என்ன அழகு என் அன்பழகு – 2

கீழ்வானின் நீர்ச்சுனையே தாவீதின் கோபுரமே

சாரோனின் மலரழகே சீயோனின் அருள்மகளே

என்ன அழகு உன் அருளழகு

என்ன அழகு உன் அன்பழகு – அம்மா

கன்னிமையின் தூய்மையும் தாழ்ச்சியின் மேன்மையும்

வார்த்தையின் உண்மையும் கொள்ளை கொண்டதே

என்னைக் கொள்ளை கொண்டதே உன் (2)

இயேசுவின தாசனாய் என்னை வாழ வைத்ததே – 2

அன்பே அருளே அமுதே அழகே நீ வாழ்க நீ வாழ்க

# மே 15

## ஆண்டவரைப் போற்றும் ஆன்மா



"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது" - **லூக்கா 1:46**

**சிந்தனை:**

† ஒரு நாளைக்கு மூன்று முறை தங்களுக்கு வல்ல செயல்களைச் செய்த இறைவனை புகழ்வது யூதரின் பழக்கம். அவ்வாறே மரியாவும் இறைவன் தனக்களித்த பேற்றினை நினைத்து இறைவனைப் புகழ்கிறார்.

† மரியா தன் புகழ்ச்சிப் பாடலில் இறைவனின் பண்புகளை, வல்ல செயல்களை எடுத்துரைத்தார்.

† நல்லவர்களை ,நாட்டுக்கு உழைத்தவர்களை போற்றுகிறோமா?

சான்றோர்களை, சாதனையாளர்களை போற்றுகிறோமா?

அனைத்திற்கும் மேலாக, இறைவன் காட்டும் அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்ற அருட்கொடைகளுக்காக நன்றி கூறுகிறோமா?

நன்மைகளை பெற்றுக்கொண்டோம் நன்மைகளை செய்வோம்

**நான் இன்று வரை பெற்றுள்ள நன்மைகள்:**

-------------------------------------------------------

-----------------------------------------------------------

-------------------------------------------------------------

**பாடல்:**

என் ஆன்மா எந்நாளுமே

ஆண்டவரை ஏற்றி ஏற்றிப் போற்றுகின்றது

என் மீட்பரை நினைத்து நினைத்து

எந்தன் நெஞ்சம் மகிழுக்னிறது – 2

ஏழைகளை எளியவரை உயர்த்தினார் - பல

இன்னல்படும் உள்ளங்களைத் தேற்றினார் - 2

செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார் - 2 நெஞ்சில்

செருக்குற்ற மனிதரையே சிதறடித்தார்- 2.

மே 16

## இறைவனில் அகமகிழ்ந்தவர்



"என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது"- **லூக்கா 1:47**

**சிந்தனை:**

† வானதூதன் கபிரியேல் மரியாவை " வாழ்க" என வாழ்த்தினார். இச் சொல்லுக்கு கிரேக்க மொழியில் :அகமகிழ்க" என்று பொருள். ஆண்டவர் மரியாவுடன் இருப்பதே அவரது மகிழ்ச்சிக்கு காரணம்.

† மரியா மகிழ்வு தருபவராக காண்கிறோம்:

1. எலிசபெத்தின் வயிற்றிலிருந்த திருமுழுக்கு யோவான் பேருவகையால் துள்ளினார் (லூக்கா 1:44)

2. கானாவூரில் மணமக்களை மகிழ்வித்தார்.

† மரியாவின் வாழ்வு போராட்டக் களமாக இருந்தாலும், அநீதிகளை அழித்து,ஏழைகளைக் காத்த இறைவனை நம்பிய காரணத்தால் ,மரியா என்றும் மகிழ்வோடு இருந்தார்.

† மரியா ஏழு துயர்களை அனுபவித்ததாக சொன்னாலும் ,உண்மையில் மரியா இருமுறை மட்டும் இயேசுவை இழந்துவிட்ட காரணத்தால் மகிழ்ச்சியை இழந்தார்.

**மரியாவின் துயரங்கள் ஏழு:**

1. எருசலேமில் சிமியோன் மரியாவை நோக்கிச் சொன்ன இறைவாக்கு.
2. குழந்தையைக் காப்பாற்ற எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லுதல்
3. எருசலேமில் மூன்று நாள் சிறுவன் இயேசு காணாமல் போதல்.
4. துன்பப் பாதையில் இயேசு சிலுவை சுமந்து செல்லும்போது அவரை சந்தித்தல்.
5. கல்வாரியில் இயேசு சிலுவை அறையப்பட்டு இறத்தல்.
6. இயேசுவின் உடல் சிலுவையிலிருந்து இறக்கப்படல்.
7. அரிமத்தியா யோசேப்பு இயேசுவை அடக்கம் செய்தல்.

**பாடல் :**

சாதா சகாய மாதா


சதா சகாயம் செய்யும் மாதா

தினந்தோறும் யாரும் வேண்டினாலும்

இல்லை என்றாத மாதா

ஆதி பிதா ஆனவரின் அன்பான புத்தரியே

ஜோதி சுடர் தேவன் திரு தாயான உத்தமியே - 2



# மே 17

## இறைவனின் ஏழை

“அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார் “- (லூக்கா 1:48)

**சிந்தனை:**

† செல்வமும் செல்வாக்கும் உள்ள வலியோரை உயர்வாக மதிப்பதும், எளியோரை, ஏழைகளை தாழ்வாகக் கருதுவதும் யூத சமூகத்தில் மட்டுமல்ல, எல்லா சமூகங்களிலும் நாம் காணும் உண்மை. சாதாரண மக்கள் “சபிக்கப்பட்டவர்கள்”(யோவான் 7:49) பாவிகள், தீட்டுப்பட்டவர்கள் எனும் எண்ணமும் இருந்தது.

† நம் சமூகத்திலும் ஒரு சிலரை ஒதுக்குவதும் , தீண்டாமையும் உள்ளன.

† கடைநிலையினரையும், தாழ்நிலையினரையும் முதன்மைப் படுத்துவதே இறைவனின் செயல்பாடாக இருந்து வருவதை விவிலியத்தில் காண்கிறோம்:

1. சிறப்பற்ற, சிறுமைப்படுத்தப்பட்ட மக்களாக இருந்த இஸ்ராயேல் மக்களை (எசா 49:13) மோசே தலைமையில் எகிப்திலிருந்து விடுவித்து, உடன்படிக்கை வாயிலாக தனது இனமாக இறைவன் தேர்ந்து கொண்டார்.

2. ஏழைகளின் சார்பாகவே எப்போதும் செயல்பட்டார் (தி பா 113:7).

3. “ஏழைகளுக்கு நற்செய்தி ” என்பதை விருதுவாக்காக கொண்டு, அவர்களுக்கே தனது பணியில் முன்னுரிமை தந்தார்.

† மரியாவும் பல்வேறு காரணங்களால் இழிநிலையில் இருந்தார். அத்தகைய மரியாவை இறைவன் கண்ணோக்கினார். தன் மகனுக்கு தாயாகும் உயர் நிலையைத் தந்தார்.

“நாளும் கிழமையும் நலிந்தார்க்கில்லை ஞாயிற்றுக்கிழமையும் பெண்களுக்கில்லை” எனும் கூற்று உண்மையா?

நலிந்தோருடன் நல்லுறவு கொள்.

**பாடல்:**

ஞானம் நிறை கன்னிகையே

நாதனைத் தாங்கிய ஆலயமே

மாண்புயர் ஏழு தூண்களுமாய் - 2

பலிபீடமுமாய் அலங்கரித்தாயே

பாவ நிழலே அணுகா

பாதுகாத்தார் உமையே பரமன் - பாவ நிழலே அணுகா

தாயுரம் நீ தரித்திடவே – 2

தனதோர் அமலன் தலமெனக் கொண்டார்.

## மே 18

## தலைமுறைகள் தோறும் போற்றப்படுபவர்



"இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்"-**லூக்கா 1:48**

**சிந்தனை:**

† மரியா வணக்கம் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு தடையாக இருப்பவற்றுள் ஒன்று. மரியாவைப் பற்றிய இறையியல் சிந்தனைகளில், கத்தோலிக்க மக்களின் பக்திச் செயல்களில் உள்ள மிகைப் படுத்தல்கள் மரியா வணக்க மறுப்புக்கு காரணம்.

† திருஅவையின் உண்மைக் கோட்பாட்டைப் பற்றி தவறாக நினைக்க இடம் தரக்கூடிய எச்சொல்லையும் செயலையும் நாம் கவனமாக தவிர்க்க வேண்டும் என திரு அவை அறிவுறுத்துகிறது (திரு அவை ,67)

† மரியா வணக்கம் நமக்கு இயல்பானது, போற்றி வளர்க்க வேண்டியது.

1. வானதூதரே மரியாவை வாழ்த்தி வணங்குகிறார் (லூக்கா 1:28)

2. எலிசபெத்து மரியாவை பெண்களுக்குள் ஆசி பெற்றவர் என போற்றுகிறார்.(லூக்கா 1:42)

3. பெண் ஒருவர் மரியாவை பேறுபெற்றவர் என வாழ்த்துகிறார் (லூக்கா 11:27)

4. இயேசுவும் மரியாவின் பெருமைக்கு காரணம் அவரது சீடத்துவமே என குறிப்பிடுகிறார் (லூக்கா 11:28)

5. திருஅவையும் மூன்றாம் நூற்றாண்டு முதலே "மிகவும் இரக்கமுள்ள தாயே" போன்ற பல மன்றாட்டுக்களை பயன்படுத்தி வருகின்றது.

† உண்மையான மரியா வணக்கம் என்பது அவரது பண்புகளை நம்மில் வளர்த்து, இயேசுவின் உண்மைச் சீடர்களாக செயல்படுவது ஆகும்.

**மரியா வணக்கத்தை எந்தெந்த வழிகளில் காட்டுகிறேன் ?**

1. செபமாலை 2. நவநாள் 3.--------------------------------- 4.---------------------------------------------

**பாடல்:**

தாயே உன் பாத மலரினிலே என்றும்

வாடாத மலராக நானிருப்பேன் - 2

தாயென்னை மறந்தாலும் நீ மட்டும் நாளும்

சேயாக அணைக்கின்ற தாய்மரி நீயே – 2

கல்வாரி மலைமேலே நமக்கான உறவால்

கனிவோடு வந்தாயே தாய் என்ற நினைவால் - 2

கடலினும் பெரியது உன் உள்ளம் அம்மா – 2

கடுகினும் சிறிய எம் துயர் தீர்ப்பாயே

## மே 19

## புதுமைப் பெண்



"அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்"-(லூக்கா 1:51-53)

**சிந்தனை:**

† மரியா பிற பெண்களைப் போல் தன் மகன், கணவர், உறவினர் எனும் குறுகிய எல்லைக்குள் சுருக்கிக் கொள்ளாமல் , தனது சமூகம், இனம், நாடு எனும் பரந்த அக்கறையுடன் சிந்தித்தார்.

† ஆதிக்க அரசியலும் , அடிமை நிலையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் நீங்கி புத்துலகு மலர வேண்டும் என்ற புரட்சிக் கனவு கண்டார்.

† விவிலிய அறிஞர் வில்லியம் பார்க்லே அன்னை மரியாவின் மூவகைப் புரட்சிகளை குறிப்பிடுகிறார்:

1. அறநெறிப் புரட்சி – செருக்குற்றோரை சிதறடிப்பது
2. சமுதாயப் புரட்சி – தாழ்ந்தோரை உயர்த்துவது
3. பொருளாதாரப் புரட்சி – பசித்தோரை நலன்களால் நிரப்புவது

† இந்த புத்துலக புரட்சிக் கனவையும் நம்பிக்கையையும் தம் மகனுக்கும் ஊட்டி வளர்த்தார் .அது நாசரேத்தூர் தொழுகைக் கூடத்தில் இயேசுவின் கொள்கையாக அறிவிக்கப்பட்டது (லூக்கா 4:18-19)

இறையாட்சியின் விழுமியங்களான அன்பு ,உண்மை ,நீதி, இரக்கம், பகிர்வு ,மன்னிப்பு, ஒற்றுமை போன்றவற்றை என் அன்றாட வாழ்வில், உறவுகளில் எவ்வாறு செயல்படுத்தி வருகிறேன்?

**பாடல்:**

தாவீதின் குலமலரே

ஒளி தாங்கிடும் அகல் விளக்கே

எம்மைக் காத்திடும் ஆரணங்கே

அருள் சுரந்திடும் தேன்சுனையே


இறைவனே முதலில் உனைத் தெரிந்தார்

கறை சிறிதில்லாக் காத்திருந்தார் - 2

மறையவர் புகழும் மாமரியே கரை சேர்பபதுவே உன் பணியே

## மே 20

## மரியாவின் மையம் இயேசு



“இடையர்கள்........விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள்” -**லூக்கா 2:16**

**சிந்தனை :**

† கத்தோலிக்கத் திருஅவையினர் பல நேரங்களில் மரியாவை தெய்வப் பெண்ணாகவே தங்கள் பாடல்களிலும் ,பக்தி முயற்சிகளிலும் கருதுகின்றனர். சில நேரங்களில் இயேசுவையே மறைக்கும் அளவுக்கு மரியாவுக்கு முன்னிடம் தருவதுண்டு. இதை மரியாவே விரும்புவதில்லை.

† நம் வாழ்விலும் வழிபாட்டிலும் மரியாவுக்கு உரிய இடம் என்ன?

1. மரியா இயேசுவின் தாய்
2. இயேசுவின் சிறந்த சீடர்
3. திருஅவையின் மாதிரி

† இயேசுவை மையப்படுத்தாமல் மரியாவை நாம் சரியாக புரிந்து கொள்ளவோ, புகழவோ முடியாது. இயேசுவுடன் இணைத்தே மரியாவை காண வேண்டும்.

† நாம் இயேசுவின் சீடர்களாய் வாழ்ந்தால் மட்டுமே மரியாவின் பிள்ளைகளாக இருக்க முடியும். உண்மையான மரியா வணக்கம் நாம் இயேசுவைப் பின்பற்ற உதவ வேண்டும்.

**நற்செய்தி நூல்களில் இயேசுவும் மரியாவும் இணைந்து காணப்படும் ஒரோ சில பகுதிகளை கண்டுபிடித்து அறிந்துகொள்க :**

1.------------------------- 2------------------------- 3------------------------------ 4.----------------------------------

**பாடல்:**

நாதத்தின் இனிமையில் பண் பாடுவோம்

எந்நாளுமே அன்னையின் புகழ்பாடுவோம்

நெஞ்சத்தில் நிறைந்திடும் நல் அன்பிற்கு

புகழ் பாக்கள் பாடிடுவோம்

ஆ….ஆ அன்னையே வாழ்க – 2

அருளால்…… நிறைந்த…… அன்னையே நீ வாழ்க


இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றிட மனமுவந்தாய் - 2

என்றும் மறைபுகழ் உன்வழி இறையுள்ளம் அறிந்திட

குறையின்றிக் காத்திடுவாய்

## மே 21

## மரியாவின் தியானச் சிந்தனை



“மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்”

“அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார” **(லூக்கா 2:19,51)**

**சிந்தனை :**

† “ஆய்வு செய்யப்படாத வாழ்க்கை வாழத் தகுதியற்றது “ எனும் சாக்ரடீசின் கூற்று ஆன்மீக வாழ்வுக்கும் பொருந்தும். வழிபாட்டில் மறையுரைகளும், அமைதி நேரங்களும், செபச் சிந்தனைகளும், தியானங்களும் நாம் இறைவனை முன்னிலைப்படுத்தி அவரைச் சந்திப்பதற்கான, அருட்கொடைகளைப் பெறுவதற்கான அழைப்புகள்.

† மரியா தன் வாழ்வில் சந்தித்த பல சூழ்நிலைகள், நடந்த நிகழ்வுகள் தெளிவாகப் புரியாத போதும், என்ன செய்ய வேண்டும் எனத் தெரியாத போதும் செபச் சிந்தனையில் ஈடுபட்டார் (லூக்கா 2:19,51).

† நமது வாழ்வின் நிகழ்வுகளை, நாம் எடுக்கும் நிலைப்பாடுகளை, சமூக அக்கறையுடன் கூடிய செயல்களை, அன்றாட உறவுகளை தியானித்து உண்மைப் பொருளை உணர வேண்டும்.

**தியானம் செய்ய சில உதவிகள் :**

1. திருவிவிலியம் வாசிப்பது
2. மறையுரைகள் கவனமுடன் கேட்பது
3. நல்ல நூல்களை படிப்பது
4. புனிதர்களின் வரலாறு
5. கலந்துரையாடல் செய்வது

**பாடல்:**

மாசில்லா கன்னியே மாதாவே உம்மேல்

நேசமில்லாதவர் நீசரே யாவர்

வாழ்க வாழ்க வாழ்க மரியே – 2 (2)

மூதாதை தாயாசெய் முற்பாவ மற்றாய்

ஆதியில் லாதோனை அம்மா நீ பெற்றாய்

வாழ்க வாழ்க வாழ்க மரியே – 2 (2)

**மே 22**

## புலம் பெயர்ந்தவர்



"யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தார் " - **மத்தேயு 2: 14-15**

**சிந்தனை :**

† வறுமை, போர், வன்முறை, பாகுபாடுகள், கலவரங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்துள்ளோரின் அவல நிலை இன்று மனித சமூகம் எதிர்கொள்ளும் மாபெரும் பிரச்சினை .

† அபிரகாம் பாலஸ்தீன் நாட்டில் அந்நியராக இருந்தவர் .

† இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் கொத்தடிமைகளாக இருந்தவர்கள். அசீரிய, பாபிலோனிய நாடுகளுக்கு அடிமைகளாகவும், அகதிகளாகவும் கொண்டு செல்லப்பட்டவர்கள்.

† இயேசுவும் ,மரியாவும், யோசேப்பும் சில ஆண்டுகள் எகிப்தில் அகதிகளாக வாழ்ந்தவர்கள்.

† "நாமும் அந்நியர் என்பதை நினைவுபடுத்தி, புலம்பெயர்ந்தவர் மற்றும், வெளிநாட்டவரை, நாம் வரவேற்க வேண்டுமென்று, விவிலியத்தில், நம் ஆண்டவர், எத்தனைமுறை கேட்டுள்ளார்!" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**ஆய்வு:**

அகதிகளாக, அந்நியராக இருப்போரை ஏற்றுக் கொள்கிறோமா? (மத் 25:35)

"அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப் படுத்தியதுண்டு " ( எபி 13:2 )

**பாடல்:**

மாதாவே சரணம் உந்தன்

பாதாரம் புவிக்காதாரம்

கன்னி மாதாவே சரணம்

மாபாவம் எம்மை மேவாமல்

காப்பாயே அருள் ஈவாயெ கன்னி

மாசில்லா மனமும் இயேசுவின் உள்ளமும்

மாந்தரின் தவறால் நோயுறக் கண்டோம் - 2

செபம் செய்வோம் தனம் செபமாலை சொல்வோம் - 2

பாவத்திற்காகப் பரிகாரம் புரிவோம்.



## மே 23

## பொறுப்புள்ள குடும்பத் தலைவி

“அப்பொழுது அவருடைய (இயேசுவின்) தாய் அவரை நோக்கி, ”மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே” என்றார். -**லூக்கா 2:48**

**சிந்தனை :**

**† மரியா நல்ல மனைவி :**

1. பேறுகாலம் என்றாலும் தம் கணவருடன் பெத்லகேம் செல்கிறார்
2. எகிப்துக்கும், நாசரேத்துக்கும் கணவருடன் பயணம்
3. இயேசுவின் 12 வயதில் யோசேப்புடன் எருசலேம் பயணம்
4. காணாமல் போன மகனை தேடி அலைந்தது

**† மரியா நல்ல தாய் :**

1. இயேசுவைப் பெற்றெடுத்தார்
2. அவரைப் பாதுகாக்க எகிப்துக்கு சென்று அகதியாக வாழ்ந்தார்
3. ஞானம், அறிவு, துணிவோடு வளர்க்கிறார் (லூக்கா 2:47)
4. கனிவு கலந்த கண்டிப்பு
5. கானாவில் பணியைத் தொடங்க தூண்டுதல்

† மரியாவின் ஆன்மீகம் குடும்ப உறவுகளில் ஈடுபட்ட ஆன்மீகம்

அன்றாட இறைவேண்டல், வார வழிபாடு இவற்றுடன் அன்றாட சாதாரண கடமைகளில் மலர்ந்த ஆன்மீகமே மரியா கடைப்பிடித்தது.

இல்லற வாழ்வு எந்த வகையிலும் துறவற வாழ்வுக்கு தாழ்ந்தது அல்ல.

**பாடல்:**

மாமறை புகழும் மரியெனும் மலரே

மாதரின் மா மணியே – 2

அமலியாய் உதித்து அலகையை மிதித்து

அவனியைக் காத்த அன்னையரே -2

உருவிலா இறைவன் கருவினில் மலர

உறைவிடம் தந்த ஆலயமே

## மே 24

## தேவையை உணர்ந்து சேவை செய்பவர்



“திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, ”திராட்சை இரசம் தீர்ந்து விட்டது” என்றார் “-(**யோவான் 2:3)**

**சிந்தனை:**

† உலகளாவிய அக்கறையின்மை பற்றி திருஅவை பேசி வருகிறது. பொதுவாக, நகர் வாழ் மக்களிடையே “அடுத்தவர் மீது அக்கறையின்மை“ என்ற நோய் அதிகம் பரவியுள்ளது.

† தொடக்க நூலில் நாம் காணும் இரு கேள்விகள் மனித சமுதாயத்தின் மனசாட்சியைத் துளைக்கும் கேள்விகள்:

1.”நீ எங்கே இருக்கின்றாய்?” என்று கடவுள் ஆதாமை நோக்கி எழுப்பிய கேள்வி

2.”உன் சகோதரன் ஆபேல் எங்கே?” என்று கடவுள் காயினிடம் எழுப்பிய கேள்வி

† மரியாவின் சிந்தனையும் செயலும் பிறரை மையமாகக் கொண்டது. பிறரது நோயை தன் நோய் போல் கருதி ,அவர்களின் துயர் களைய அக்கறையுடன் ஈடுபட்டார். இதைத்தான் கானாவூர் திருமண விருந்தில் காண்கிறோம். மணமக்களின் தன்மானப் பிரச்சினையை தன் மானப் பிரச்சினையாக கருதி, துணிந்து அவர்களின் துயர் துடைத்தார் .

“ அடுத்தவர் மீது அக்கறை கொள்வோர் பேறுபெற்றோர் “

பிறர் மீது நான் எவ்வாறு அக்கறை காட்டுகிறேன்?

**பாடல்:**

மாதா உன் கோவிலில்

மணிதீபம் ஏற்றினேன் - 2

தாயென்று உன்னைத்தான் - 2

பிள்ளைக்கு காட்டினேன் மாதா

மேய்ப்பனில்லாத மந்தை வழிமாறுமே – 2

மேரி உன் ஜோதி கண்டால் விதி மாறுமே

மெழுகுபோல் உருகினோம்

கண்ணீரை மாற்ற வா மாதா

## மே 25

## மரியாவின் ஒரே செய்தி



“இயேசுவின் தாய் பணியாளரிடம், ”அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார்”– **யோவான் 2:5**

**சிந்தனை :**

† பல்வேறு காலக் கட்டங்களில் மரியா கொடுத்த காட்சிகளைப் பற்றியும்,அவர் தந்த செய்திகளைப் பற்றியும் அறிவோம்.சில செய்திகள் விவிலியச் செய்திகளின் மறுபதிப்புகளாகவும், சில செய்திகள் திகிலை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. இவை தவிர கனவுகள் வழியாக தனிப்பட்ட முறையில் சில நபர்களோடு பேசி செய்தி பெற்றதாக சொல்வர்.

† ஆனால் விவிலியத்தின்படி, மரியா நமக்கு சொல்லும் ஒரே செய்தி “ இயேசு சொல்வதையெல்லாம் செய்யுங்கள் “ என்பதே.

† இன்றும் அன்னை மரியா மக்களின் இல்லாமை,இயலாமை ஆகியவை பற்றியே அதிகம் கவலைப்படுகிறார்.

**அன்னை மரியா இன்று சொல்லும் செய்தி என்ன?**

1. எனக்கு-----------------------------------------------------------------------------------------------------
2. என் குடும்பத்திற்கு-------------------------------------------------------------------------------------
3. பங்குக்கு ---------------------------------------------------------------------------------------------------
4. திரு அவைக்கு-------------------------------------------------------------------------------------------

**பாடல்:**

மாமறை புகழும் மரியெனும் மலரே

மாதரின் மா மணியே – 2

பழியினைச் சுமந்து உலகினில் பிறந்து

ஒளியினை ஏற்றிய அகல் விளக்கே – 2

இருள்திரை அகற்றி அருள் வழிகாட்டி

வானக வாழ்வை அளிப்பாயே

## மே 26

## மரியாவின் தாய்மை



“கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், ”உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்று குரலெழுப்பிக் கூறினார். அவரோ, ”இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்” என்றார் “ - **லூக்கா 11:27**

**சிந்தனை:**

† பொதுவாகவே தாய்மையைப் போற்றுவதுண்டு. “போற்றித் தாய் என்று பொற்குழல் ஊதடா “என்றார் பாரதி.

“உலகெல்லாம் உதிப்பிடம் தாய்மை

உதித்துத் தங்கி ஒழுகுமிடம் தாய்மை

கலையின் மூலம் கமழுமிடம் தாய்மை

கடவுளன்பு சுரக்குமிடம் தாய்மை “

என தாய்மையைப் போற்றுகின்றார் திரு வி. க.

† தம்மைக் கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த தாய் உண்மையாகவே பேறுபெற்றவர் என்பதை இயேசு மறுக்கவில்லை. தாய்மை நிலையில் அவரும், அவரது உடல் உறுப்புகளும் , அவரது செயல்களும் புனிதமானவை என இயேசு ஏற்றுக் கொள்கிறார்.

**† மனித உடல் குறிப்பாக தாயின் உடல் மாண்புடையது:**

1. இறைவனால் படைக்கப்பட்டது (தொ நூ 2:7)
2. தாயின் உதரத்தில் உருவாக்கப்பட்டது(தி பா 139:13)
3. இறைவாக்கு மனிதரானதால் மனித உடல் புனிதமானது
4. அருளடையாளங்கள் வழியாக இறைவனின் கோவிலானது (1கொரி 3:16)

   தாய்மையை மதிப்போம்

**பாடல் :**

இதயம் மகிழுதம்மா – துயர்

கறைகள் மறையுதம்மா

உள்ளமும் துள்ளுதம்மா – உந்தன்

தாய்மையின் நினைவாலே – அம்மா

தாயெனும் போதினிலே – மனம்

தானுனைத் தேடுதம்மா – 2

ஈன்ற தாயும் போற்றும் உந்தன்

பாதம் பணிந்திடுவேன் - அம்மா

மே 27

## வீரத்தின் விளை நிலம்



“ சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர் “- **யோவான் 19:25**

**சிந்தனை :**

**† மரியாவின் வாழ்வில் துயர்கள் ஒரு தொடர் கதையே:**

1. சாதாரணப் பெண் என்பதால் இயற்கைச் சீற்றங்களாலும் ,பஞ்சம் போர்களாலும் அதிகமாக அவதிப்பட்டிருப்பார்.

2. உரோமை அரசியல் ஆதிக்கத்தாலும்,கலாச்சாரப் புறக்கணிப்பாலும் ,பொருளாதாரச் சுரண்டலாலும் அதிகம் பாதிக்கப்பட்டார்.

3. பசி, பாதுகாப்பின்மை ,இடம் இன்மை ,அகதி நிலை போன்றவற்றை அனுபவித்தார்.

4. தன் ஒரே மகன் அநியாயமாக கொல்லப்பட்டதைக் கண்டு ஆழ்ந்த துயரம் அடைந்தார்.

5. தன் சமூகத்தின் துன்ப துயர்களையும் உற்று நோக்கி அவர்களின் வேதனைகளைப் புரிந்து கொண்டார்.

**† அன்னை மரியாவின் அணுகுமுறை:**

1. தன் துயர்களை இறைவனின் விருப்பம் என ஏற்றுக்கொண்டாலும் ,அவையெல்லாம் மாற்றப்பட வேண்டும் என நம்பினார். அவர் நம்பிய இறைவன் விடுதலையையும் ,வாழ்வையும் வழங்குபவர்.

2. பிறர் துன்பங்களைப் போக்குவதை முதன்மைப்படுத்தினார்.

3. துயர் போக்கும் பணிக்கு தன் மகனை அர்ப்பணித்து ,சிலுவை மரணம் வரையிலும் தம் மகனின் பணியில் பங்கேற்றார்.

**பிறர் துயர் களைய நான் எடுக்கும் முயற்சிகள் :**

1.----------------------------------------------- 2. -------------------------------------- -3 ---------------------------------

**பாடல்:**

கலங்கரை தீபமே
கலங்களின் தாரகையே
துலங்கிடும் மணியே கலங்குவோர் கதியே
காத்திடுவாய் தாயே

மாதர்களின் மாதிரியே
மாஇருளில் ஒளி தாரகையே
மாதரசியே மனஒளி தாராய்
மாசு அகலச் செய்வாய்

**மே 28**

## தலைசிறந்த தலைவி



“அவர்கள் அனைவரும் ( திருத்தூதர்கள்) சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள் “-**திருத்தூதர் பணிகள் 1:14**

**சிந்தனை:**

† சமூகம் சார்ந்த ,சமயம் சார்ந்த பொறுப்புகளில் அதிகம் பங்கேற்பவர்கள் பெண்கள் என்றாலும் பெண் தலைவர்கள் அரிதாகவே உள்ளனர். யூத சமூகத்திலும் பெண் தலைமைக்கான வாய்ப்புக்கள் அதிகம் இல்லை. ஆனால், ஆணாதிக்க மரபுகளைக் கடந்து, துணித்து தலைமைப் பொறுப்புடன் செயல்பட்டவர் அன்னை மரியா.

**† மரியாவின் தலைமைப் பண்புகள் :**

1. சிற்றூரைச் சார்ந்த சாதாரண இளம்பெண் என்றாலும் , எதிர்கால உலகம் பற்றிய கனவு, இலட்சியம் அவரிடம் இருந்தது.(உதாரணம் :மரியாவின் புகழ் பாடல்)

2. பிரச்சினைகளை உடனடியாக இனம் கண்டு கொள்வது, அதைத் தீர்க்க முயற்சி எடுப்பது. (உதாரணம்: கானாவூர் திருமணம்)

3. இயேசுவின் இறப்பு, உயிர்ப்புக்கு பிறகு, சிதறிச் சென்ற சீடர்களை ஒன்று சேர்த்து ,செபித்து, தூய ஆவியைப் பெற உதவி செய்தது

(தி ப 1:13-14)

**பெண்களின் தலைமைப் பண்பு எவ்வாறெல்லாம் குடும்பத்தில், திரு அவையில் பயன்படுத்தப்படுகிறது?**

1.---------------------------------------------------------

2.---------------------------------------------------------

3.---------------------------------------------------------

**பாடல்:**

தாரகை சூடும் மாமரியே – உம்

தாளினைப் பணிந்தோம் காத்திடுவாய்

தேவனை உலகுக்கு அளித்தவளே

தேடியத் துணையைக் கொடுப்பவளே

வாடிய மகவை அணைப்பவளே

வாழிய ஞானியர் காவலியே

மே 29

## விண்ணக மண்ணக அரசி



“வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது பெண் ஒருவர் காணப்பட்டார் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார் நிலா அவருடைய காலடியில் இருந்தது அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார் “-திருவெளிப்பாடு 12:1

**சிந்தனை:**

† 1950 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பியுஸ் “ மரியா இறைவனின் மாசற்ற தாய் ,அவருடைய மண்ணாக வாழ்வின் பயணம் முடிந்த போது ,உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் “ எனும் விசுவாசக் கோட்பாட்டை அறிவித்தார்.

1. மரியாவின் விண்ணேற்பு இறைவன் மரியாவிற்கு ஆற்றிய அரும்பெரும் செயல்களில் இறுதியானது.

2. விண்ணேற்பு என்பது மரியா தம் மகனின் மகிமையில் பங்கேற்ற நிகழ்வு.

3. திரு அவை அடையவிருக்கும் மகிமைக்கு முன்னடையாளம்.

4. நம் உடலின் மகிமையை உணர்த்துகிறது.

† மரியா “அனைத்துலக அரசியாக இறைவனால் உயர்த்தப் பெற்றார் “என்பதை திரு அவை கொண்டாடுகிறது.

“ அவர் அரசியாக ஒளிவீசுகிறார், தாயாகப் பரிந்து பேசுகிறார் “ (திருத்தந்தை 6 ஆம் பவுல்)

**பாடல்:**

மாதாவே துணை நீரே, உம்மை

வாழ்த்தி போற்ற வரம் தாரும்

ஈதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா

ஏற்றன்பாக எமைப்பாரும்

வானோர் தம் அரசே தாயே – எம்

மன்றாட்டை தயவாய் கேளும்

ஈனோர் என்றெமை நீர் தள்ளாமல்

எக்காலத்துமே தற்காரும்.



**மே 30**

## மரியாவின் காட்சிகள்

“வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண் ஒருவர் காணப்பட்டார். - **தி வெ 1:1**

**சிந்தனை :**

**† உலகெங்கும் மரியாவின் நூற்றுக்கணக்கான காட்சிகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் முக்கியமான ஏழு காட்சிகள் :**

1. எருசலேம் காட்சி - கி.பி. 46 ஆகஸ்ட் 22ந்தேதி, தோமாவுக்கு

2. உரோம் காட்சி - கி.பி. 352 ஆகஸ்ட் , திருத்தந்தை லிபேரியஸ்க்கு

3. வால்சீன்காம் காட்சி - கி.பி. 1061 செப்டம்பர் 24ந்தேதி, ரிசல்ட்டின் தே பவர் செஸ் என்ற பெண்மணிக்கு

4. குவாதலூப்பே காட்சி - கி.பி. 1531 டிசம்பர் 9ந்தேதி முதல் 12ந்தேதி வரை, யுவான் தியெகோ, யுவான் பெர்னார்டினோ ஆகியோருக்கு

5. வேளாங்கண்ணி காட்சி - கி.பி. 16ஆம் நூற்றாண்டில்

6. லூர்து காட்சி - கி.பி. 1858 பிப்ரவரி 11ந்தேதி முதல் ஜூலை 16ந்தேதி வரை, பெர்னதெத் சூபிரூஸ் என்ற சிறுமிக்கு

7. பாத்திமா காட்சி - கி.பி. 1917 மே 13ந்தேதி முதல் அக்டோபர் 13ந்தேதி வரை, லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று சிறாருக்கு

**அன்னை மரியாவின் காட்சிகள்**

1. மக்களின் நல்வாழ்வில் மரியாவுக்கு உள்ள அக்கறையின் வெளிப்பாடு.

2. இறைவன் நமக்கு ஏற்கனவே தந்த மறை உண்மைகளை கடைப்பிடிக்க உதவுகின்றன.

3. இயேசுவைப் போல் அன்னை மரியாவும் நம்முடன் என்றும் இருக்கின்றார்.

**பாடல்:**

முதல்வனின் தாயே புதல்வர்கள் பணிந்தோம் உதவிட வாராயோ

உந்தன் அருளினைத் தாராயோ

வாழ்ந்திடத் துடிக்கின்றேன் - எனக்கு

வழிவகைத் தெரியவில்லை

கைகளைப் பிடித்திடுவாய் - அம்மா

துயரின்றி நடந்திடுவேன்

மே 31

## மரியன்னைக்கு முடிசூட்டும் வழிபாடு



**1. பாடல் :** மாசில்லா கன்னியே

மாசில்லாக் கன்னியே மாதாவே உம்மில்
நேசமில்லாதவர் நீசரே யாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே -2

மூதாதை தாயாசெய் முற்பாவ மற்றாய்
ஆதியில் லாதோனை மாதே நீ பெற்றாய்
வாழ்க வாழ்க வாழ்க மரியே -2

**2. முன்னுரை**

"மரியா, தம் இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும், உடலுடனும் ஆன்மாவுடனும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றார்" என்று 1950 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் அறிவித்தார் .

நான் ஆண்டவரின் அடிமை என தன்னையே முழுமையாகவும் இறுதி வரையிலும் இறைத் திருவுளத்திற்கு அர்ப்பணித்த மரியாவை இறைவன் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டி மகிமைப்படுத்தியது நியாயமான செயலே .

அன்னை மரியா இன்றும் நம்முடன் இருந்து, இயேசுவின் வழியில் நாமும் வாழ்வடைய நம்மை தொடர்ந்து தூண்டுகிறார். அன்பு, உண்மை ,நீதி ,தியாகம், பரிவிரக்கம் எனும் இயேசுவின் இறையாட்சிப் பண்புகளின் மாதிரியாக விளங்கி ,அப் பண்புகளில் நாமும் வளர்ந்திட நமக்கு துணையாக உள்ளார் .

மரியாவின் பண்புகளையும், பணிகளையும் நமதாக்கி, நலிந்தோரை வாழ வைக்க நம்மை ஈடுபடுத்தி, மரியா பெற்ற மகிமையில் பங்கு பெற நாம் அழைக்கப்படுகிறோம் .

அன்புக்குரியவர்களே , இன்று நாம் நம் ஆண்டவராம் இயேசுவின் தாயான புனித கன்னி மரியின் திருவுருவத்திற்கு மணிமுடி சூட்டி மகிழ ஒன்று கூடி வந்துள்ளோம். விண்ணக மண்ணக அரசியாக மரியாவைப் போற்றும் நாம் அவரது எடுத்துக்காட்டான வாழ்வைப் பின்பற்றவும், அவரது பரிந்துரையால் நம் விசுவாசம், நம்பிக்கை, அன்பு பெருகவும் ,அனைத்திலும் இறைவனது விருப்பத்தையே தேடவும் அருள் கேட்போம் .

**3. தொடக்க மன்றாட்டு**

**குரு :** ஆண்டவருடைய பெயராலே நமக்கு உதவி உண்டு

**மக்கள் :** அவரே விண்ணையும் மண்ணையும் படைத்தவர்

**குரு :** புனித கன்னி மரியாவின் திருமகனைப் போற்றுவோம்

**மக்கள் :** ஆண்டவரைப் போற்றுவோம், அவருக்கு நன்றி கூறுவோம்

**மன்றாடுவோமாக :**

எல்லாம் வல்ல எங்கள் அன்புத் தந்தையே!

உமது திருமகன் இயேசுவின் தாயை எம் அனைவருக்கும் அன்னையாகவும் அரசியாகவும் அளித்தீரே. அவரது வல்லமைமிகு பரிந்துரையால் நாங்கள் விண்ணக மகிமையில் பங்கு பெற அருள்புரியும் .

உம்மோடும் தூய ஆவியோடும் ஒன்றித்து வாழும் எங்கள் ஆண்டவரும் உம திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். **ஆமென்** .

## 4.புகழுரை :

**நாங்கள் உம்மை போற்றுகிறோம்**

-இறைவா நீர் இரக்கமும் நீதியும் உள்ளவர். செருக்குற்றோரை சிதறடிக்கிறீர், தாழ்ந்தோரை உயர்த்துகிறீர்.

-கன்னித்தாயின் திரு வயிற்றில் உம் வார்த்தை மனு உருவாகச் செய்தீர், உமது இறை ஞானத்தை வெளிப்படுத்தினீர் .

-உம் திருமகன் மரணம்மட்டும் தன்னையே தாழ்த்தி ,உம் வலப்பக்கத்தில் அமர்ந்து படைப்பனைத்தின் அரசராக ஆட்சி செய்கின்றார்

-இறைவனின் அன்னையான கன்னி மரியா தன்னையே தாழ்த்தி ,மீட்பரின் தாயாகி ,வானதூதருக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, இரக்கத்தின் அரசியாக வீற்றிருக்கின்றார் .

-எம் அன்னையை பின்பற்றி நாங்களும் ஒரு நாள் விண்ணகப் பேரின்பம் அடைந்து ,மீட்படைந்தோருக்கான வெற்றிவாகை சூடச் செய்தருளும்.

## 5.பாடல் :

என் ஆன்மா இறைவனையே

ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது

என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது

தாழ்நிலை நின்ற தம் அடியவரைத்

தயையுடன் கண்கள் நோக்கினார் (2)

இந்நாள் முதலாம் தலைமுறைகள் – 2

எனைப் பேறுடையாள் என்றிடுமே

ஏனெனில் வல்லமை மிகுந்தவரே

எனக்கரும் செயல் பல புரிந்துள்ளார் (2)

அவர்தம் பெயரும் புனிதமாகும் – 2

அவருக் கஞ்சுவோர்க்கு இரக்கமாகும்

## 6. (முடிசூட்டுதல்)

மாதா மன்றாட்டு மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும்

கிறிஸ்துவே இரக்கமாயிரும்

ஆண்டவரே இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்

விண்ணகத்திலிருக்கிற தந்தையாகிய இறைவா

எங்கள் மேல் இரக்கமாயிரும்

உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா

தூய ஆவியாகிய இறைவா

தூய்மை நிறை மூவொரு இறைவா

புனித மரியே **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

இறைவனின் புனித அன்னையே

கன்னியருள் சிறந்த கன்னியே

கிறிஸ்துவின் அன்னையே

இறையருளின் அன்னையே

தூய்மைமிகு அன்னையே

கன்னிமை குன்றா அன்னையே

அன்புக்குரிய அன்னையே

வியப்புக்குரிய அன்னையே

நல்ல ஆலோசனை அன்னையே

மீட்பரின் அன்னையே

திருச்சபையின் அன்னையே

அறிவுமிகு அன்னையே

போற்றுதற்குரிய அன்னையே

வல்லமையுள்ள அன்னையே

தயையுள்ள அன்னையே

நம்பிக்கைக்குரிய அன்னையே

நீதியின் கண்ணாடியே

ஞானத்திற்கு உறைவிடமே

எங்கள் மகிழ்ச்சியின் ஊற்றே

ஞானப் பாத்திரமே

மகிமைக்குரிய பாத்திரமே

பக்தி நிறை பாத்திரமே

மறைபொருளின் நறுமலரே

தாவீது அரசரின் கோபுரமே

தந்த மயமான கோபுரமே

பொன் மயமான ஆலயமே

உடன்படிக்கையின் பேழையே

விண்ணகத்தின் வாயிலே

விடியற்காலையின் விண்மீனே

நோயுற்றோரின் ஆரோக்கியமே

பாவிகளுக்கு அடைக்கலமே

துயருறுவோருக்குத் தேற்றரவே

கிறிஸ்தவர்களுடைய சகாயமே

வானதூதர்களின் அரசியே

முதுபெரும் தந்தையரின் அரசியே

இறைவாக்கினர்களின் அரசியே

திருத்தூதர்களின் அரசியே

மறைசாட்சிகளின் அரசியே

இறையடியார்களின் அரசியே

கன்னியரின் அரசியே

அனைத்துப் புனிதர்களின் அரசியே

அமல உற்பவியான அரசியே

விண்ணேற்பு பெற்ற அரசியே

திருச்சபையின் அரசியே

குருக்களின் அரசியே

குடும்பங்களின் அரசியே

அமைதியின் அரசியே

இந்திய நாட்டின் அரசியே

**7. இறுதி செபம்:**

அருளே அன்பே இறைவா, உம் திருமகனின் தாய் மரியாவை அன்போடும் பக்தியோடும் மகிமைப்படுத்திய எங்களை அவருடைய பரிந்துரையால் எல்லா மண்ணக விண்ணக நலன்களால் நிரப்பியருளும்.

**8. இறுதி ஆசீர்**

**9. பாடல்**

தாரகை சூடும் மாமரியே

தாளினைப் பணிந்தோம் காத்திடுவாய்

தாரகை சூடும் மாமரியே

தேவனை உலகுக்கு அளித்தவளே

தேடிய துணையைக் கொடுப்பவளே

வாடிய மகவை அணைப்பவளே

வாழிய ஞானியர் காவலியே

தென்னகக் கன்னி கடலலையும்

பன்னெழில் இமய பாமலையும்

மின்னெழில் எமது தாயகமும்

உன் புகழ் பணிந்தே பாடாதோ

## அன்னையை நோக்கி மன்றாட்டுகள்

### 1. மண்ணக மீட்பரின் மாண்புயர் அன்னையே!

மண்ணக மீட்பரின் மாண்புயர் அன்னையே! என்பது தூய கன்னி மரியாவைக் குறித்து கத்தோலிக்க திருச்சபையில் திருப்புகழ் மாலையின் இரவு மன்றாட்டில் பாடப்படும் நான்கு பாடல்களுள் ஒன்றாகும்.

மண்ணக மீட்பரின் மாண்புயர் அன்னையே

விண்ணகம் செல்லத் திறந்த வாயிலே

தண் கடல் மீதொளிர் விண்மின் நீரே

வீழ்ச்சி நின்றெழ முயன் றிடும் மக்களை

ஆட்சி செய்து அவர்க்குதவிடுவீர்.

இயற்கை வியப்புற இறைவனை ஈன்றீர்

ஈன்ற பின்னரும் கன்னியாய் நின்றீர்

வானவன் கபிரியேல் வாழ்த்துரை ஏற்றீர்

ஈனப் பாவிகள் எமக்கு இரங்குவீர். **ஆமென்**

### 2. மூவேளை செபம்

மூவேளை செபம் என்பது கடவுள் மனிதரானதை மையப்படுத்தி, மீட்பு வரலாற்றில் இயேசு கிறிஸ்து மற்றும் அன்னை மரியாவின் பங்களிப்பை நினைவு படுத்தும் செபம் ஆகும். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளில் செபிக்கப்படுவதால், இது மூவேளை செபம் என்று அழைக்கப்படுகிறது.

#### பொதுவான மூவேளை செபம்

கிறிஸ்தவ திருவழிபாட்டு ஆண்டில், பாஸ்கா காலம் தவிர மற்ற காலங்களில் பின்வரும் மூவேளை செபம் செபிக்கப்படுகிறது.

ஆண்டவருடைய தூதர் மரியாவுக்குத் தூதுரைத்தார்.

மரியா தூய ஆவியாரால் கருவுற்றார். **(1 மங்கள வார்த்தை செபம்)**

இதோ ஆண்டவரின் அடிமை.

உமது சொற்படியே எனக்கு நிகழட்டும். **(1 மங்கள வார்த்தை செபம்)**

வாக்கு மனிதர் ஆனார்.

நம்மிடையே குடிகொண்டார். **(1 மங்கள வார்த்தை செபம்)**

கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி:

இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மன்றாடுவோமாக:** இறைவா! உம் திருமகன் மனிதர் ஆனதை உம்முடைய வானதூதர் வழியாக நாங்கள் அறிந்திருக்கிறோம். அவருடைய பாடுகளினாலும் இறப்பினாலும் நாங்கள் உயிர்ப்பின் மாட்சி பெற உமது அருளைப் பொழிவீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் ஆமென்.

### பாஸ்கா கால மூவேளை செபம்

கிறிஸ்தவர்கள், இயேசுவின் உயிர்ப்பையும் விண்ணேற்றத்தையும் கொண்டாடும் பாஸ்கா காலத்தில் பின்வரும் மூவேளை செபம் செபிக்கப்படுகிறது.

விண்ணக அரசியே! மனம் களிகூரும். அல்லேலூயா.

ஏனெனில் இறைவனைக் கருத்தாங்கும் பேறு பெற்றீர். அல்லேலூயா.

தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா.

எங்களுக்காக இறைவனை மன்றாடும். அல்லேலூயா.

கன்னி மரியே! அகமகிழ்ந்து பூரிப்பு அடைவீர். அல்லேலூயா.

ஏனெனில் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா.

**மன்றாடுவோமாக:** இறைவா உம்முடைய திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் உலகம் மகிழத் திருவுளம் கொண்டீரே! அவருடைய அன்னையாகிய கன்னி மரியாவின் பரிந்துரையால் நாங்கள் நிலை வாழ்வின் பெரு மகிழ்வில் பங்கு பெற அருள் புரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். **ஆமென்.**

### 3. மங்கள வார்த்தை செபம்

மங்கள வார்த்தை செபம், அன்னை மரியாவின் உதவியைப் பெற கத்தோலிக்க கிறிஸ்தர்களால் பயன்படுத்தப்படும் செபம் ஆகும். மங்கள வார்த்தை செபத்தின் முதல் பகுதியான வாழ்த்து பகுதி, லூக்கா நற்செய்தியில் இருந்தும், இரண்டாவது பகுதியான வேண்டுதல் பகுதி கிறிஸ்தவ மரபில் இருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.

#### வழக்கில் உள்ள நடைமுறை வடிவம்:

அருள் நிறைந்த மரியே வாழ்க!

கர்த்தர் உம்முடனே.

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே.

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய

இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசி'ட மரியாயே,

சர்வேசுவரனுடைய மாதாவே,

பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக

இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும்

வேண்டிக்கொள்ளும். - **ஆமென்**

**தற்போது மாற்றப்பட்டுள்ள புதிய வடிவம்:**

அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க!

ஆண்டவர் உம்முடனே.

பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே.

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய

இயேசுவும் ஆசி பெற்றவரே.

தூய மரியே,

இறைவனின் தாயே,

பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக

இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும்

வேண்டிக்கொள்ளும். - **ஆமென்.**

## 4. ஆழ்கடல் விண்மீன் நீயே!

ஆழ்கடல் விண்மீன் நீயே! என்பது திருப் புகழ்மாலையின் மாலை மன்றாட்டில் தூய கன்னி மரியாவைக் குறித்து பாடப்படும் பாடலாகும்.

ஆழ்கடல் விண்மீன் நீயே வாழ்க!

தாழ்ந்து இறைவனை ஈன்றாய், வாழ்க!

ஆயினும் கன்னியாய் நிலைத்து, விண்ணின்

வாயிலும் ஆயினாய் வியத்தகு வகையில்

வானவர் கபிரியேல் வாக்கை ஏற்றாய்

ஊனம் விளைத்து அமைதியைக் குலைத்த

ஏவையின் பெயரை மாற்றி அமைத்தாய்

மூவா அமைதி நிலைக்க அருள்வாய்.

அன்னை எமக்கு நீயெனக் காட்டு,

உன்மகனாக எமக்காய் பிறந்த

நன்மகன் இயேசு எம்செபம் எல்லாம்

உன்வழி ஏற்பார், நல்வழி பிறக்க

தன்னிகர் இல்லாக் கன்னியே வாழ்க,

உன்னத சாந்தம் உடையோய், வாழ்க்

எண்ணிலா எம்பாவம் பொறுத்து, எமக்கு

விண்ணகத் தூய்மையும் சாந்தமும் அருள்க.

தூயநல் வாழ்வை எமக்குத் தருவாய்,

தீயவை அழித்து வழிநடத் திடுவாய்

சேயர்உன் சேயாம் இயேசுவைக்கண்டு

ஓயா தென்றும் இன்புறச் செய்வாய்.

தந்தை, திருமகன்,தூய ஆவியும்,

எந்தை இறைவன், மும்மையில் ஒருவர்

தந்தோம் அவர்க்குத் தாள்பணிந் தின்று

வந்தனை, வணக்கம், வாழ்த்துடன் புகழும் - **ஆமென்**

### 5. வானகம் ஆளும் அரசியே வாழ்க!

வானகம் ஆளும் அரசியே வாழ்க! அல்லது பழைய வழக்கில் பரலோகத்துக்கு இராக்கினியே வாழ்க என்பது தூய கன்னி மரியாவைக் குறித்து கத்தோலிக்க திருச்சபையில் திருப்புகழ்மாலையின் இரவு மன்றாட்டின் முடிவில் பாடப்படும் நான்கு பாடல்களுள் ஒன்றாகும்

வானகம் ஆளும் அரசியே வாழ்க

வானவர் அனைவரின் தலைவியே வாழ்க

எஸ்ஸேயின் வேரே உலகில் பேரொளி

உதயம் ஆகிய வாயிலே வாழ்க.

மாட்சி மிகுந்த கன்னியே மகிழ்க.

ஆட்சி தகைமையின் தாயே மகிழ்க.

எழில்மிகு நாயகி இயேசுவை வேண்டி

பொழிந்திடும் அருளை விடைபெறும் எம்மேல். **ஆமென்**

### 6. மரியாவின் பாடல்

மரியாவின் பாடல் என்று அழைக்கப்படும் பாடல் லூக்கா நற்செய்தியில் இயேசுவின் தாய் மரியாள், திருமுழுக்கு யோவானின் தாயான எலிசபெத்தைச் சந்தித்த போது கடவுளை போற்றிப் பாடியப் பாடலாகும். இப்பாடலின் வரிகள் லூக்கா நற்செய்தியில் இடம் பெறுகின்றன (லூக்கா 1:46-55).

### 7. பெர்னார்டின் செபம் **அல்லது மிகவும் இரக்கமுள்ள தாயே.**

மிகவும் இரக்கமுள்ள தாயே!

உமது அடைக்கலமாக ஓடிவந்து,

உம்முடைய உபகார சகாயங்களை

இறைஞ்சி மன்றாடிக் கேட்ட ஒருவராகிலும்

உம்மால் கைவிடப்பட்டதாக

ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை

என்று நினைத்தருளும்.

கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே!

தயையுள்ள தாயே!

இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு

உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறோம்.

பெருமூச்செறிந்து அழுது பாவிகளாயிருக்கிற நாங்கள்

உமது தயாபரத்தில் காத்து நிற்கின்றோம்.

அவதரித்த வார்த்தையின் தாயே

எங்கள் மன்றாட்டைப் புறக்கனியாமல்

தயாபரியாய் கேட்டுத் தந்தருளும் தாயே

**ஆமென்.**

(வழக்கமாக தமிழில் இச்செபத்தை கீழ்வரும் கூடுதல் செபத்தோடு முடிப்பர்)

ஜென்பப் பாவமில்லாமல் உற்பவித்த புனித மரியாயே, பாவிகளுக்கு அடைக்கலமே, இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம். எங்கள் பேரில் இரக்கமாயிருந்து எங்களுக்காக உமது திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். - **அருள்நிறைந்த** (மூன்று முறை)

## 8. இரக்கத்தின் அரசி செபம்

இரக்கத்தின் அன்னையாகிய எங்கள் அரசியே வாழ்க! எங்கள் வாழ்வே, தஞ்சமே, இனிமையே வாழ்க! நாடிழந்து தவிக்கும் நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்து கூப்பிடுகிறோம். இந்த கண்ணீர் பள்ளத்தாக்கிலே நின்று மனம் நொந்து அழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய இரக்கமுள்ள திருக்கண்களை எங்கள்பேரில் திருப்பியருளும். மேலும் நாங்கள் இந்த வேற்றிடம் கடந்த பிறகு, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு கிறிஸ்து நாதருடைய, முழுமையான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும், இரக்கமும் கனிவும் இனிமையும் உள்ள கன்னி மரியாவே!

(கவிதை நடையில் திருப்புகழ்மாலையில் உள்ளபடி)

வாழ்க அரசியே தயைமிகு அன்னையே

வாழ்வே இனிமையே தஞ்சமே வாழ்க

தாயகம் இழந்த ஏவையின் மக்கள்

தாயே என்றுனைக் கூவி அழைத்தோம்.

கண்ணீர்க் கணவாய் நின்றுனை நோக்கி

கதறியே அழுதோம் பெருமூச் செறிந்தோம்

ஆதலால் எமக்காய் பரிந்து உரைப்பவளே

அன்புடன் எம்மைக் கடைக்கண் பாராய்.

உன்திரு வயிற்றின் கனியாம் இயேசுவை

இம்மை வாழ்வின் இறுதியில் காட்டுவாய்

கருணையின் உருவே தாய்மையின் கனிவே

தருவாம் இனிமையே கன்னி மரியே. **ஆமென்**

### 9. கடவுளின் அன்னையே கன்னி மரியே!

கடவுளின் அன்னையே கன்னி மரியே! எனத் தொடங்கும் பாடலானது தூய கன்னி மரியாவைக் குறித்து கத்தோலிக்க திருச்சபையில் திருப் புகழ்மாலையின் இரவு மன்றாட்டின் முடிவில் பாடப்படும் நான்கு பாடல்களுள் ஒன்றாகும் .

கடவுளின் அன்னையே கன்னி மரியே

அடைக்கலம் நீரென அணுகி வந்தோம்

கடைக்கண் பார்த்து எம்தேவையில் எல்லாம்

எடுத்தெறி யாமல் எம்வேண்டல் ஏற்பீர்

இடுக்கண் இடர்கள் அனைத்திலும் இருந்து

இடைவிடாது எம்மைக் காத்திடு வீரே

பெண்களுக் குள் நீர் பேறுபெற் றீரே!

விண்ணக மாட்சியில் விளங்கும் தாயே. **ஆமென்.**

### 10. மூன்று மங்கள வார்த்தை செபம்

இது கத்தோலிக்க திருச்சபையில் மரபு சார்ந்த மரியாவின் பக்தி முயர்சிகளில் ஒன்றாகும். இது நாள்தோறும் மரியாவை நோக்கி மங்கள வார்த்தை செபத்தினை மும்முறை செபிப்பது ஆகும். இதை இரவு தூங்குவதற்கு முன், ஆன்மசோதனை செய்துவிட்டு செபிப்பது வழக்கம். இப்பழக்கத்தை புனிதர்களான அந்தோனியார், அல்போன்ஸ் மரிய லிகோரி, ஜான் போஸ்கோ முதலியோர் பின்பற்றினர், பிறரையும் பின்பற்ற ஊக்குவித்தனர். தூய கன்னி மரியாவிடமிருந்து பல புனிதருக்கு இது குறித்த காட்சிகள் கிடைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

### 11. கத்தோலிக்க செபமாலை

கத்தோலிக்க செபமாலை என்பது கத்தோலிக்கரின் பக்தி முயற்சிகளுள் ஒன்றாகும். பாரம்பரியப்படி செபமாலையில் மகிழ்ச்சி, துயரம், மகிமை மறைபொருள்களின் 15 மறையுண்மைகளை தியானிக்கும் வழக்கம் இருந்தது. இதன் அடிப்படையிலேயே திருத்தந்தை புனித ஐந்தாம் பயஸ் இந்த செப முயற்சியை அதிகாரப்பூர்வமானதாக அறிவித்தார். 2002ல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ஒளியின் மறைபொருள்கள் என்னும் பெயரில் இயேசுவின் பணி வாழ்வை சிந்திக்கும் 5 புதிய மறையுண்மைகளை சேர்த்தார்.

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்களின் பக்தி முயற்சியாக ஒவ்வொருநாளும் 150 தடவை ”இயேசு கற்பித்த இறை வேண்டலாகிய” பரலோக மந்திரத்தை சொன்னார்கள். பிற்பட்ட காலங்களில் 150 அருள் நிறை மரியே என்ற செபத்தைச் சொன்னார்கள். இன்னும் மத்திய காலப் பகுதியில், தாம் சொல்லுகின்ற 150 செபத்தை எண்ணுவதற்காக நூலில் பொருத்தப்பட்ட மணிகளைப் பாவித்தார்கள்.இன்று பாவிக்கின்ற செபமாலையானது டொமினிக்கன் செபமாலையை அடிப்படையாகக் கொண்டது.

“ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பிலிருந்து எங்களை மீட்டருளும். எல்லாரையும் விண்ணகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகம் தேவையோ, அவர்களுக்கு சிறப்பாக உதவி புரியும். ”

## செபமாலை மறைபொருள்கள்

### மகிழ்ச்சி மறைபொருள்கள்

கபிரியேல் தூதர் கன்னி மரியாவுக்குத் தூதுரைத்தது. (லூக்கா 1:30,38 - **வரம்:** தாழ்ச்சி)

மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தது. (லூக் 1:41-42 - **வரம்:** பிறரன்பு)

இயேசுவின் பிறப்பு. (லூக் 2:6-7 - **வரம்:** எளிமை)

இயேசுவைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தது. (லூக் 2:22 - **வரம்:** பணிவு)

காணாமற் போன இயேசுவைக் கண்டடைந்தது. (லூக் 2:49-50 - **வரம்:** அவரை எந்நாளும் தேடி நிற்க)

### ஒளியின் மறைபொருள்கள்

இயேசு யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு பெற்றது. (மத்தேயு 3:16-17 - **வரம்:** குணப்படுத்தும் ஆவியானவர்)

கானாவூர் திருமணத்தில் இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியது. (யோவான் 2:11 - **வரம்:** நம்பிக்கை)

இயேசு இறையரசை பறைசாற்றி, மனந்திரும்ப அழைத்தது. (மாற்கு 1:14-15 - **வரம்:** மனம்மாற்றம்)

இயேசு தாபோர் மலையில் உருமாற்றம் அடைந்தது. (மாற்கு 9:3,7 - **வரம்:** புனிதம்)

இயேசு இறுதி இரவுணவின்போது நற்கருணையை ஏற்படுத்தியது. (மத்தேயு 26:26-28 - **வரம்:** ஆராதனை)

### துயர மறைபொருள்கள்

இயேசு இரத்த வியர்வை சிந்தியது. (மத்தேயு 26:42 - **வரம்:** பாவங்களுக்காக மனத்துயர் அடைய)

இயேசு கற்றூணில் கட்டுண்டு அடிப்பட்டது. (மாற்கு 15:15 - **வரம்:** புலன்களை அடக்கி வாழ)

இயேசு முள்முடி தரித்தது. (மத்தேயு 27:29-30 - **வரம்:** ஒறுத்தல், நிந்தை தோல்விகளை மகிழ்வுடன் ஏற்க)

இயேசு சிலுவை சுமந்து சென்றது. (யோவான் 19:16-17 - **வரம்:** வாழ்க்கைச் சுமையை பொறுமையோடு ஏற்று வாழ)

இயேசு சிலுவையில் அறையப்பட்டது. (யோவான் 19:30 - **வரம்:** இயேசுவை அன்பு செய்யவும், பிறரை மன்னிக்கவும்)

### மகிமை மறைபொருள்கள்

இயேசு உயிர்த்தெழுந்தது. (மத்தேயு 28:5-6 - **வரம்:** உயிருள்ள விசுவாசத்துடன் வாழ)

இயேசுவின் விண்ணேற்றம். (லூக்கா 24:50-51 - **வரம்:** நம்பிக்கையுடன் விண்ணக வாழ்வைத் தேட)

தூய ஆவியாரின் வருகை. (திருப்பாடல் 2:4 - **வரம்:** ஆவியாரின் ஒளியையும் அன்பையும் பெற)

இறையன்னையின் விண்ணேற்பு. (திருவெளிப்பாடு 12:1 - **வரம்:** நாமும் விண்ணக மகிமையில் பங்குபெற)

இறையன்னை விண்ணக மண்ணக அரசியாக மணிமுடி சூட்டப் பெற்றது. (லூக்கா 1:49,52 - **வரம்:** அன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொள்ள)

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செபம்

ஓ மரியே, மீட்பின் மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக, நீர் எப்போதும் எம் பாதையில் சுடர்விடுகின்றீர், நோயாளிகளின் நலவாழ்வை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம். சிலுவையடியில் இயேசுவின் பாடுகளோடு உம்மை இணைத்துக் கொண்டீர், உமது விசுவாசத்தைக் காத்தீர், உரோம் மக்களின் மீட்பரே தாயே, எமது தேவை என்னவென்று உமக்குத் தெரியும், இறையன்பு அன்னையே, எமக்கு உதவியருளும், சோதனை துன்ப வேளைகளில் எம் மன்றாட்டை புறக்கணியாதேயும், எம்மை எல்லாவித ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றும், மகிமையுள்ள கன்னியே, பேறுபெற்றவரே **ஆமென்**.

## 12. வியாகுலத் தாய்மரி (தொடர் பாடல்)

வியாகுலத் தாய்மரி அல்லது வியாகுலச் சங்கீதம் என்னும் பாடல் தூய மரியாவின் துயரங்களின் நினைவாகக் கத்தோலிக்க திருச்சபையில் பாடப்படும் பாடலாகும். கிறிஸ்துவின் பாடுகளின் போது மரியாள் பட்ட துன்பங்களை நினைவுகூறும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

திருமகன் சிலுவையில் தொங்கிய போது அருகில்,

கண்ணீர் பெருகிடத் துயருடன் அந்தோ!

நின்றார் வியாகுலத் தாய்மரி.

பொருமலும் வருத்தமும் பொங்கிட ஆங்குத்

துயருறும் அவரது நெஞ்சை, அந்தோ!

ஊடுருவிற்றே கூர்வாள், காணீர்.

தேவ சுதனின் அன்பால் அன்னை,

பேரரும் ஆசி பெற்றவர், அன்று

எத்துணைத் துயரும் வருத்தமும் கொண்டார்.

அன்புத் தாயவர் மாண்புறு மகனின்

துன்பம் அனைத்தும் நோக்கிய போது

கொண்ட துயரமும் வருத்தமும் என்னே!

இத்துணைத் துயரில் மூழ்கித் தவிக்கும்

கிறிஸ்துவின் அன்னையைக் காணும் போதில்
எவரும் வருந்தாதிருந்திடுவாரோ!

தம் திருமகனோடு பெருந்துயர் கொள்ளும்
கிறிஸ்துவின் அன்னையை நோக்கிடும் போதில்
உளம் உருகாமல் நிற்பவர் யாரோ!

தம்முடைய மக்களின் பாவம் நீங்க
தாங்கரும் வேதனை, கசையடி ஏற்ற
தம் திருமகனாம் இயேசுவைக் கண்டார்.

தேனினுமினிய தேவனின் மைந்தன்
அனைவரும் கைவிட ஆறுதலின்றித்
தனிமையில் தமது உயிர்விடக் கண்டார்

அன்பின் ஊற்றாம் அன்னையே, அம்மா,
அடியேன் உம்முடன் அழுது வருந்த,
உமதுள்ளத் துயரை உணர்ந்திடச் செய்வீர்.

இறைவனாம் கிறிஸ்துவுக் கன்பு செய்து
என்றும் அவருக் குகந்தவராக,
என்னுளம் அன்பால் எரிந்திடச் செய்வீர்.

தூய நல்தாயே இவ்வரம் வேண்டும்:
துயருறும் சிலுவை நாதரின் காயம்
ஆழமாய் நெஞ்சில் அழுந்திடச் செய்வீர்.

அடியேனுக்காய்க் காயமும் துன்பமும்
ஏற்கத் திருவுளம் கொண்ட உம் மகனின்
துயரில் எனக்கொரு பங்கு தருவீர்.

சிலுவை நாதருடன் துயருறவும்,
பக்தியால் உம்முடன் புலம்பவும்,
என்றன் உயிருள்ளளவும் அருள் புரிவீரே.

சிலுவையடியில் உம்மோடு நின்று, சிந்தும்
கண்ணீர் அழுகையில் நானும் சேர்ந்து
பங்குற விரும்புகின்றேனே.

கன்னியர் தம்முள் சிறந்த கன்னியே,
கனிவுடன் என்னைக் கடைக்கண் நோக்கி
உம்மோடழுதிட அருள் செய், அம்மா.

கிறிஸ்துவின் சாவை நானும் தாங்கவும்
பாடுகள் யாவிலும் பங்கு கொள்ளவும்
காயம் நினைத்து இரங்கவும் செய்யும்.

நின் மகன் காயம் நினைந்துளம் வருந்தவும்
அவரது சிலுவையும், சிந்திய இரத்தமும்
என் மனம் நிரப்ப அருள் செய்வீரே.

என்றன் இறுதித் தீர்ப்பு நாளில் எரியில்
வீழ்ந்து அவதியுறாமல் கன்னியே,
என்னைக் காத்திடுவீரே.

கிறிஸ்துவே, நான் இம்மை விட்டங்கே
வந்திடும் வேளை வெற்றிக் குருத்தைத்
தாங்க நும் அன்னை வழியாய் அருள்வீர்.

என்னுடல் மரித்து அழியும் போதில்
என்றன் ஆன்மா பரகதி மகிமை
எய்திடும் வரத்தை வேண்டி நின்றேன். **ஆமென்.**



**நேர்ச்சைத் திருத்தலம்**

**63, ஹால்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010**